உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௪.] தாதுஹு தைமீ [பகுதி-௩.

Vol. 34 January—February 1937. No. 3.

## நியாயப்பிரவேச மணிமேகலை.

[ரூஉ-ஆம்பக்கத் தொடர்ச்சி]

கீழ், பக்கம் ஏது நிட்டாந்தம் உபநயம் நிகமனம் என்னும் அநுமான உறுப்புக்கள் நிரூபிக்கப்பட்டன.

இனி, அவ்வுறப்புக்களாலாகும் அநுமானங்கள் நிரூபிக்க லாகும். அவை இந்நூலுள் (மணிமேகலையுள்) நியாயநூல்வழக்கி னின்றும் சிறிது வேறுபடுதலால், அவ்வேறுபாடறிதற்பொருட்டு நியாயநூல்வழக்கான அநுமானவகைகளை முதலிற் காட்டிக் கொண்டு, பின்பு இந்நூலில் (மணிமேகலையில்) உள்ளபடி ஆராயப் படும்.

நியாயநூல்களில், அநுமானங்கள், I. அன்னுவயவேதிரேகி, II. கேவலான்னுவயி III. கேவலவேதிரேகி, என மூன்றுவகையாக வழங்கப்பட்டுவருகின்றன.

### I. அன்னுவயவெதிரேகி.

அவற்றுள், அன்னுவயவேதிரேகியனுமானமாவது: ஏதுப் பொருளுள்ள இடத்திலெல்லாம் துணிபொருளும் உண்டென்று காட்டும் அன்னுவயவியாப்திவாசகத்தோடுகூடிய அன்னுவயதிட் டாந்தவசனமும், துணிபொருளில்லாத இடத்திலெல்லாம் ஏதுவு மில்லையென்றுகாட்டும் வெதிரேகவியாப்திவாசகத்தோடுகூடிய வெதிரேகதிட்டாந்தவசனமும் உடையதாய்வருவது. இதற்கு உதாரணம் வருமாறு:—

*

1. அன்னுவயதிட்டாந்தப்பதுதி.

1. இப்பொய்கை சேறுடையது,

2. தாமரையுடைமையால்.

3. எது எது தாமரையுடையது, அது அது சேறுடையது; தாமரையோடைபோலும்.

4. இதுவும் அங்ஙனம்.

5. ஆதலின் இங்ஙனம்.

என்பதாம். இவற்றுள்,

1. 'இப்பொய்கை சேறுடையது' என்பது பக்கவசனம். இதனுள், பொய்கை பக்கப்பொருள். சேறுடைமை துணிபொருள்.

2. 'தாமரையுடைமையால்' என்பது ஏதுவசனம். இதனுள் தாமரையுடைமை ஏதுப்பொருள்.

3. 'எது எது தாமரையுடையது, அது அது சேறுடையது' என்பது அன்னுவயவியாத்திவசனம். இது (தாமரையாகிய) ஏதுவுள்ள இடத்தெல்லாம் (சேறாகிய) துணிபொருளுமுண்டென்று காட்டினமையால் அன்னுவயவியாத்திவசனமாயிற்று. 'தாமரையோடைபோலும்' என்பது அன்னுவயதிட்டாந்தவசனம். இதனுள், சொல்லப்பட்ட தாமரையோடை திட்டாந்தப்பொருள்.

4. 'இதுவும் அங்ஙனம்' என்பது அன்னுவய உபநயவசனம். இதன்பொருள்: இப்பொய்கையும் தாமரையோடைபோலச் சேறுடைமையின் வியாப்பியமான தாமரையுடையது என்பதாம்.

5. 'ஆதலின் இங்ஙனம்' என்பது அன்னுவய நிகமனவசனம். இதன்பொருள்: சேறுடைமையின் வியாப்பியமான தாமரையுடைமையால், தாமரையுடைமையின் வியாபகமான சேறுடையது என்பதாம்.

வியாப்பியம்—குறைநிலை. வியாபகம்—மிகுநிலை. இவற்றுள் தாமரையுடைமை குறைநிலை (வியாப்பியம்). தாமரை சேறுள்ள விடத்தெல்லாமின்றி ஒருசில சேறுள்ளவிடத்தின்மட்டுமிருத்தலால் தாமரையுடைமை சேறுடைமையின் குறைநிலையாயிற்று. சேறுடைமைமிகுநிலை (வியாபகம்); தாமரையுள்ளவிடத்தேயன்றித் தாமரையில்லாதவிடத்தும் சேறுண்மையால், சேறுடைமை தாமரையுடைமையின் மிகுநிலையாயிற்று.

2 வெதிரேகதிட்டாந்தப்பகுதி.

1. இப்பொய்கை சேறுடையது.
2. தாமரையுடைமையால்.
3. யாது யாது சேறுடையதன்று, அது அது தாமரை யுடையதன்று; வெம்பரற்காடுபோலும்.
4. இஃது அங்ஙனமன்று.
5. ஆதலின் இங்ஙனமன்று.

என்பதாம்.

இவற்றுள், முதலிரண்டுறுப்புக்கும் அன்னுவயப்பகுதியி லுரைத்தாங் குரைக்க.

3. 'யாது யாது சேறுடையதன்று, அது அது தாமரை யுடையதன்று; வெம்பரற்காடுபோலும்' என்பது வெதிரேக வியாத்தியுடன்கூடிய திட்டாந்தவசனம். இதனுள், 'யாது யாது சேறுடையதன்று, அது அது தாமரையுடையதன்று' என்பது வெதிரேகவியாத்திவசனம். இது, துணிபொருளாகிய சேறில் லாதவிடத்தெல்லாம் ஏதுப்பொருளாகிய தாமரையும் இல்லை யென்றுகாட்டுதலால் வெதிரேக வியாத்திவசனமாயிற்று. 'வெம்பரற்காடுபோலும்' என்பது வெதிரேகதிட்டாந்தவசனம்; துணிபொருளாகிய சேறு வெம்பரற்காட்டிலின்மையால் வெம்பரற் காடு வெதிரேகதிட்டாந்தப்பொருளாயிற்று.

4. 'இஃது அங்ஙனமன்று' என்பது வெதிரேக உபநயவச னம். இதன்பொருள்:—சேறுடையதல்லாமையின் வியாபகமான தாமரையுடையதல்லாததன்று (தாமரையுடையது) என்பதாம்.

5. 'ஆதலின் இங்ஙனமன்று' என்பது வெதிரேக நிகமனவச னம். இதன்பொருள்: சேறுடையதல்லாமையின் வியாபகமான தாமரையுடையதல்லாததன்று ஆதலால், தாமரையுடையதல்லா மையின் வியாப்பியமான சேறுடையதல்லாததன்று (சேறுடை யது) என்பதாம்.

இவ்வனுமானம், அன்னுவயதிட்டாந்தமும் வெதிரேகதிட் டாந்தமும் உடைமையால் 'அன்னுவயவெதிரேகி' எனப்பட்டது. அன்னுவயம்—உடன்பாடு. வெதிரேகம்—எதிர்மறை. அன்னுவய வியாத்தி—உடன்பாட்டுடனிகழ்ச்சி. வெதிரேகவியாத்தி—எதிர் மறையுடனிகழ்ச்சி.

## II. கேவலான்னுவயி.

இனி, கேவலான்னுவயியனுமானமாவது:— வெதிரேகதிருஷ் டாந்தவாக்கியங்கள் ஒன்றும் சொல்லுதற்கு இடமின்றி அன்னுவய திருஷ்டாந்தப்பகுதிமட்டும் சொல்லுதற்கு உரியதாய்வருவது. இதற்கு உதாரணம் வருமாறு:—

[பெயர்தெரியாததொரு பொருளைச் சுட்டி,]

1. இப்பொருள் பெயரிட்டுவழங்கத்தகுவது.
2. அறியப்படுதலால்.
3. யாது யாது அறியப்படுவது, அது அது பெயரிட்டு வழங்கத்தகுவது; குடம்போலும்.
4. இதுவும் அங்ஙனம் (குடம்போல் அறியப்படுவது).
5. ஆதலின் இங்ஙனம் (குடம்போல் அறியப்படுவதாதலிற் குடம்போற் பெயரிட்டுவழங்கத்தகுவது).

என்பதாம்.

இது, 'யாது யாது பெயரிட்டுவழங்கத்தகாதது, அது அது அறியப்படுவதன்று' என்ற வெதிரேகவியாத்திவசனத்தோடுகூடிய திருஷ்டாந்தவசனம் சொல்லுதற்கேற்ற பெயரிட்டுவழங்கத்தகாத பொருளொன்றுமில்லாமையால், அன்னுவயவியாத்தியோடுகூடிய திருஷ்டாந்தமாத்திரமுடையதாய்க் கேவலான்னுவயி ஆயிற்று.

## III. கேவலவெதிரேகி.

இனி, கேவலவேதிரேகியனுமானமாவது:— அன்னுவயதிருஷ் டாந்தவாக்கியங்கள் ஒன்றும் சொல்லுதற்கிடமின்றியே வெதிரேக திருஷ்டாந்தவாக்கியங்கள்மட்டும் சொல்லுதற்கு உரியதாயிருப் பது. இதற்கு உதாரணம் வருமாறு:—

1. ஆனினம் ஏனைவிலங்கின் வேறு.
2. அலைதாடியுடைமையால்.
3. யாது யாது ஏனைவிலங்கின் வேறன்று, அது அது அலை தாடியுடையதன்று; எருமைபோல.
4. இஃது அங்ஙனமன்று [அலைதாடியுடையதன்றன்று; (அலைதாடியுடையது).]
5. ஆதலின் இங்ஙனமன்று [அலைதாடியுடையதன்றன்று ஆதலால் ஏனைவிலங்கின் வேறன்றன்று (வேறு).]

என்பதாம்.

இது, 'யாது யாது அலைதாடியுடையது, அது அது எருவிலங்கின்வேறு' என்றுசொல்லி அன்னுவயதிட்டாந்தங்காட்டுதற்கேற்ற அலைதாடியுடையது பிறிதொன்றுமில்லாமையால் அன்னுவய திட்டாந்தமின்றி, அலைதாடியில்லாத எருமைமுதலிய வெதிரேக திட்டாந்தமாத்திரமுடைமையால் கேவலவெதிரேகியாயிற்று.

இவ்வாறு காட்டப்பட்ட அன்னுவயவேதிரேகி, கேவலான்னுவயி, கேவலவேதிரேகி என்னும் மூவகை அனுமானங்களுள்,

கேவலான்னுவயியனுமானத்துக்கு வெதிரேகவியாப்தியும் வைதன்மியதிட்டாந்தமும் காட்டுதற்கு ஒருபொருளு மில்லாமையால் அது அவ்வேதிரேகம் என்ற திட்டாந்தப்போலியாய்ப் பிரமாணமாகாதென்று கருதியும்,

கேவலவேதிரேகியனுமானத்துக்கு அன்னுவயவியாப்தியும் சாதன்மியதிட்டாந்தமும் காட்டுதற்கு ஒருபொருளு மில்லாமையால் அது அனன்னுவயம் என்ற திட்டாந்தப்போலியாய்ப் பிரமாணமாகாதென்று கருதியும்,

அவற்றை ஒழித்துவிட்டு, எஞ்சிநின்ற அன்னுவயவேதிரேகியனுமானமாகிய ஒருபகுதியையே பிரமாணமாகக்கொண்டு அதனை, காரியானுமானம், காரணானுமானம், சாமானியானுமானம் என மூன்றுவகையாகப்பகுத்து, நிறுத்தமுறையே அவற்றை நிரூபித்துக்காட்டக்கருதி,

'தூய காரிய வேதுச் சுபாவம்' (சுஅ)

என்ற அடியால், குற்றமற்ற காரியானுமானநிருபணம்செய்யத் தொடங்கியிருப்பதாகத்தெரிகிறது.

அவ்வடி சொற்றொடரால் பின்னுள்ள அடிகளுடன் தொடர்புடையதுபோலத் தோன்றுமாயினும் பொருளால் தொடர்பின்றியொழிகிறது; அதாவது: 'வாலி துரோபதையை மூக்கரிந்தான்' என்பதுபோலப் பொருட்பொருத்தமின்றிப் பொருந்தாக்கூற்றாக முடிகிறது என்பதாம்.

எங்ஙனமெனில்? 'தூயகாரியவேதுச்சுபாவம்' என்னும் சுஅ-ஆம் அடியின்பின் இருக்கவேண்டிய அடிகள் அந்தத் தூயகாரியானுமானத்தை உதாரணங்காட்டி விளக்கவேண்டிய வாக்கியங்களமைந்தனவாயிருக்கவேண்டுமன்றே; அங்ஙனம் அமைந்தனவாயில்லை; அங்ஙனம் காரியானுமானத்தை விளக்காதொழிதலே

யன்றி, அக்காரியானுமானத்தை அடுத்துவிளக்கவேண்டிய காரணானுமானத்தையும் விளக்காமலே, அக்காரணானுமானத்தின் பின்புள்ள சாமாநியானுமானத்தைத் தொடக்கம்செய்யும் அடியு மின்றி அதனை விளக்கும் வாக்கியங்கள் அமைந்துள்ளனவாகக் காணப்படுகின்றன.

அதாவது: இப்போது புத்தகங்களிலுள்ளபடி சுகூ-ஆம் அடி தொடங்கி எசு-ஆம் அடிமுடியவுள்ள எட்டு அடிகளும் சாமானி யானுமானநிரூபணமாயுள்ளன என்பதாம்.

இந்த சுகூ-ஆம் அடிக்கு முன்பாக சாமானியானுமானத் தொடக்கம்செய்திருக்கவேண்டிய முதலடியும் காணப்படவில்லை.

இவ்வாறாக சுஅ-ஆம் அடிக்குப் பின்னும், இப்போது புத்தகங் களிலுள்ள சுகூ-ஆம் அடிக்கு முன்னுமாக இடையே இருக்க வேண்டிய, நல்லனுமானங்களுக்கு உதாரணங்காட்டி விளக்கியிருக்க வேண்டிய பல அடிகள் காணப்படாமலிருப்பது மிகவும் கவலைப் படத்தக்கது.

அவ்வடிகளெல்லாம் இப்பாட்டின் நுவல்பொருளின் உயிர்நிலை யான நல்லனுமானங்களின் விளக்கவுரைகளை உட்கொண்டிருத்தற் குரியன.

இப்பகுதி பழைய ஓலைப்பிரதிகளில் எங்கேனும் கிடைக்கப் பெற்று இக்குறை நிரப்பப்பெறுமானால் இப்பாட்டின்பொருள் இடையறவுபடாமல் அறிதற்கு உபகாரமாகும். இதனை ஒருவாறு ஆராய்ந்துகாட்டுதும். இதனுள்,

"தூய காரிய ஏதுச் சுபாவம்" (சுஅ)

என்பதனால், காரியானுமானநிரூபணம் தொடங்கப்பட்டதென்பது வெளிப்படை.

இவ்வடியின் பொருள், இப்போது புத்தகங்களில் இதன் அடுத்த அடியாகக்காணப்படும் 'ஆயிற் சத்த மநித்த மென்றல்' என்பது தொடக்கமாயுள்ள அடிகளின் பொருளோடு சிறிதும் பொருந்தாதிருக்கிறது.

எங்ஙனெனில்? "தூய காரிய வேதுச் சுபாவம்" என்ற சுஅ-ஆம் அடியால் காரியானுமானநிரூபணம்செய்யத் தொடங்கி யிருப்பதாகத் தெரிகிறோம்.

காரியானுமானத்துக்குத் துணிபொருளின் காரியப்பொருளே ஏதுவாயிருக்கவேண்டுமென்பது நியமம்.

"ஆயிற் சத்தம் அநித்த மேன்றல்
பக்கம் பண்ணப் படுத லாலெனல்
பக்க தன்ம வசன மாகும்''

என்ற கூகூ, ஏ0, ஏக, ஆம் அடிகளால் சொல்லப்பட்ட அனுமான சாதனப்பொருள்களுள், சத்தம் பக்கப்பொருளாகவும், அநித்தமாதல் துணிபொருளாகவும், பண்ணப்படுதல் ஏதுப்பொருளாகவும் காணப் படுகின்றன.

இவற்றுள், பண்ணப்படுதலாகிய ஏதுப்பொருள் அநித்தத் தன்மையாகிய துணிபொருளின் காரியப்பொருளாயிருக்குமாயின், இது காரியானுமானமென்னலாம்.

இங்குச் சொல்லப்பட்ட துணிபொருளோ அநித்தமாதல். அவ்வநித்தமாதலின் காரியம் பண்ணப்படுதல் என்ற ஏதுப்பொருளாயில்லை.

ஏனெனில், பண்ணப்படுதல் அநித்தமாதலின் காரியமாயிருக்குமாயின் குடம் பண்ணப்படுதற்கு முந்தியே அதன் அநித்தமாதல் இருந்துகொண்டு பண்ணப்படுதலைத் தோற்றுவிக்கவேண்டும்; அங்ஙனம் இல்லாமையால் அநித்தத்தன்மையின் காரியம் பண்ணப்படுதல் என்று சொல்லவொண்ணாது; ஆதலால் இது காரியானுமானமன்றாயிற்று.

நிறுத்தமுறையே காரியானுமானத்தை யடுத்துரைத்தற் குரியதான காரணானுமானமாமோவெனின் அதுவுமாகாது.

ஏனெனில்? காரணானுமானமாயின், பண்ணப்படுதல் என்னும் ஏது, தன் துணிபொருளாகிய அநித்தமாதற்குக் காரணமாயிருக்க வேண்டுமன்றோ? காரணம் காரியத்துக்கு நியதமாய் முன்னிருக்க வேண்டுமே. குடம் தோன்றும்பொழுதே பண்ணப்படுதலும் உடனிகழ்வதேயன்றி முன்னிகழ்ந்ததன்று. அநித்தமாகிய மின்னல் முதலியவற்றில் பண்ணப்படுதலின்மையால் அநித்தமாதற்குப் பண்ணப்படுதல் காரணமன்றென்பது பெறப்படுகிறது. அநித்தமாதல் மின்னல் முதலியவற்றுள் இயல்பானே நிகழ்வதுபோலச் சத்தத்தின்கண்ணும் அநித்தமாதல் இயல்பானே நிகழ்வதாம். ஆதலால் இது காரணானுமானமுமன்றென்பது பெறப்பட்டது.

இனி, காரிய காரண சாமானியக்கருத்து' என்னும், நிறுத்த முறையுள் எஞ்சிநின்ற சாமானியானுமானம் ஒன்றுள்ளது. அது ஏதுசாத்தியங்களுக்குக் காரியகாரணத்தொடர்ச்சியின்றி அவை இரண்டும் ஒருநிலைக்களத் துளவாகும் அன்னுவயவியாத்தியாகிய உடனிகழ்ச்சியும் (சபக்கத்தொடர்ச்சியும்), அவற்றின் இன்மைக ளிரண்டும் ஒருநிலைக்களத்துளவாகும் வெதிரேகவியாத்தியும் (விபக்கத்தொடர்ச்சியும்) உள்ளதாகவேயிருக்கும்.

இச்சாமானியானுமானம் உஎ-ஆம் பாட்டில் அளவைவாதி கூற்றினுள் 'போது' என்ற பெயரால் வழங்கப்பட்டிருக்கிறது.

போதுத்தன்மையும் சாமானியதருமமும் ஒன்ருகலால், போது என்பது சாமானியம் என்பதன் பரியாயமே.

ஆதலால், போது என்ற பெயரால் வழங்கப்படும் அனுமான மும் சாமானியம் என்ற பெயரால் வழங்கப்படும் அனுமானமும் ஒன்றேயென்று கொள்ளத்தகும்.

இது உஎ-ஆம் பாட்டில் வருமாறு:—

“போதுவெனப் படுவது சாதன சாத்தியம்
இவையன் னுவய மின்ரு யிருந்தும்
கடந்திகழ் யானைக் கானவொலி கேட்டோன்
உடங்கெழில் யானைஅங் குண்டென வுணர்தல்.” (உகூ–௬உ)

என்பது.

இதன்பொருள்: ‘பொது (சாமானியம்) என்னும் பெயருடைய அனுமானமாவது: சாதனசாத்தியங்களிரண்டும் காரியகாரணத் தொடர்பாகிய அன்னுவயமின்றியிருந்துகொண்டே அவை ஒரு நிலைக்களத்திருத்தலாகிய தொடர்பு ஒன்றேபற்றித் துணிபொரு ளுணர்வைத் தோற்றுவிப்பது; அஃதெங்ஙனமென்னில்? மதநீர்கம ழும் யானைக்காட்டிற்சென்ருேன், அக்காட்டின் மறைவிடத்திற் சட சடவோசைகேட்டவாறே யானைக்காட்டில் யானைக்கும் சடசட வென்னுமொலிக்கும் உடனிகழ்ச்சிகொண்டு, அங்கு யானையுண்டு என்று உணர்தற்குச்சாதனமாயிருப்பது என்பதாம்.

உணர்தற்குச்சாதனம் உணர்தல் எனப்பட்டது.

இங்கு, ‘அன்னுவயமின்ருய்’ என்றதனுல் காரியகாரணத் தொடர்ச்சியை விலக்கி, ‘உடங்கு’ என்றதனுல் ஒருநிலைக்களத்துள தாம் உடனிகழ்ச்சி கொள்ளப்பட்டிருக்கிறது.

இருவேறுபொருள்களுக்குரிய ஒருநிலைக்களம், போது என்ற பெயரால் வழங்கப்படுகிறது; இது, சாத்தனுக்கும் கொற்றனுக்கும் இந்தவீடு போது; எல்லோர்க்கும் இம்மன்றம் பொது என்னும் உலகவழக்கானும் பெறப்படும். பொது எனினும், சமானம் எனினும் ஒக்கும். பொதுவாகிய ஒருநிலைக்களத்தைச் சமானுதிகரண மென்பர் வடநூலார்.

இதனுல், போது, சமானம் என்பதன் பரியாயமாதலால், (துணிபொருளுடன்) பொதுவில் (சமானமான ஒருநிலைக்களத்தில்) இருக்கும் ஏதுப்பொருள் இடவாகுபெயரால் போது எனப்பட்டு, பின், அதனை உறுப்பாகவுடைய அனுமானம் இருமடியாகுபெயரால் போது எனப்பட்டது.

அவ்வேது, தன் துணிபொருளுடன் சமானமான ஒருநிலைக்களத்திருத்தலால், அதனையுடைய அனுமானம் சாமானியம் எனப்பட்டது. ஆதலால் சாமானியானுமானமே உஎ—ஆம் பாட்டில் போது என்னும் பெயரால் வழங்கப்பட்டதென்று அறியக்கிடக்கிறது.

அப் பொது அனுமானத்தின் துணிபொருளாகிய யானையும், அதன் காட்டிலுள்ள சடசடவொலியாகிய ஏதுவும் அக்காடாகிய ஒருநிலைக்களத்துள்ளன.

அச்சடசடவொலி யானையானன்றிப் பிறவாற்றானும் நிகழ்தல் கூடுமாதலின் அவ்வொலிக்கும் யானைக்கும் காரியகாரணத் தொடர்ச்சியின்றி ஒருநிலைக்களத்துளவாம்தொடர்ச்சியொன்றே கொள்ளத்தகும்.

யானையுடன் ஒருநிலைக்களத்துளதாகிய அக்காட்டொலியை ஏதுவாகக்கொண்டு அங்கு யானையுண்டு என்று துணிதற்குரிய அனுமானம் பொதுவென்னும் பெயரால் வழங்கப்பட்டதாயிற்று.

அவ்வாறே இருபத்தொன்பதாம்பாட்டில் கூகூ—ஆம் அடி தொடங்கியுள்ள 'சத்தம் அநித்தம் பண்ணப் படுதலால்' என்னும் அனுமானமும், காரியகாரணத்தொடர்ச்சியின்றி, அநித்தத் தன்மையான துணிபொருளோடு ஒருநிலைக்களத்தில் (சத்தத்தின் கண்) உள்ள பண்ணப்படுதலை ஏதுவாகக்கொண்டமையால், சாமானியானுமானமென்றே கொள்ளக்கிடக்கிறது.

சத்தத்தின்கண் பண்ணப்படுதல் என்றது, பல், நா, அண்ணம், இதழ் முதலிய உறுப்புக்களுடன்கூடி வாயுவைத் தொழிற்படுத்தலால் பேச்சுவடிவமான ஒலி தோற்றுவிக்கப்படுதல்.

'காரிய காரண சாமா னியக்கருத்து' என்ற நிறுத்தமுறையி னிறுதியிலுள்ள சாமானியானுமானம், புத்தகங்களில் இப்போ துள்ள கூகூ-ஆம் அடிதொடங்கி நிரூபிக்கப்பட்டிருத்தலால், அதற்குமுன்பு நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டிய காரணானுமானப் பகுதியும், அதற்குமுன்பிருக்கவேண்டிய காரியானுமானப்பகுதி யும் காணப்படவில்லை என்பது கண்கூடாயிற்று.

இங்கு இடைப்பட்டிருக்கவேண்டிய காரணானுமானம் உஎ-ஆம் பாட்டில் **முதல்** என்ற பெயரால் வழங்கப்படுகிறது. (முதல் எனினும் காரணம் எனினும் ஒக்கும்.) இவ்வனுமானம்,

'முதலெனப் படுவது கருக்கோண் முகில்கண்டு
இதுமழை பெய்யு மெனவியம் பிடுதல்' (ரு௫-ரு௯)

என்று காட்டப்பட்டது. இது தன் துணிபொருளாகிய மழைபெய் தற்குக் காரணமாயுள்ள கருக்கொண்டமுகிலை ஏதுவாகக்கொண்ட மையால் காரணானுமானமாயிற்று. ஆயினும் காரணமாயுள்ள கருக் கொண்முகில் காற்றாற் ருக்குண்டு கலைந்தவழி மழையொழிதலால் இவ்வனுமானம் தூயதன்று என்று கருதிச் 'செவ்விதன்மையிற் சிந்தையில் வைத்திலேன்' என்ற மணிமேகலை மனங்கொள்ளுமாறு, உகூ-ம் பாட்டில் தூயகாரணானுமானத்துக்கும் வேறு உதா ரணங்காட்டியிருக்கவேண்டும்; அது "ஆயிற் சத்தம் அநித்த மென்றல்" என்னும் அடிக்கு முற்பட்டிருக்கவேண்டும்.

இதற்கும் முன்னதாகக் காட்டியிருக்கவேண்டிய காரியானு மானத்தின் உதாரணமும் காணப்படவில்லை; கூஅ-ம் அடியால் "தூய காரிய வேதுச் சுபாவம்" என்று காரியானுமானம் சொல்லத் தொடங்கியிருப்பதுமட்டும் தெரிகிறது.

27-ஆம் பாட்டில் இக்காரியானுமானம் எச்சம் என்ற பெய ரால் சொல்லப்பட்டிருக்கிறது. எச்சம் என்பதும் காரியம் என்ப தன் பரியாயமே: இதற்கு அங்குக் காட்டியிருக்கும் உதாரணம்,

'எச்ச மென்பது வெள்ளவே துவினல்
நிச்சயித் தத்தலை மழைநிகழ் வுரைத்தல்' (ருரு-ருச)

என்பதாம்.

இதனுட் சொல்லப்பட்ட எது வெள்ளம். அது தனிபொருளாகிய மழையின் காரியமாயிருத்தலால் காரியானுமானமெனப்பட்டது. மழையின்றியே பெருநீர்நிலைகளைப் பகைவர், கோடழிய வெட்டிவிட்டவிடத்து வெள்ளம்வருதலும் உண்டாதலால், இதனைத்தூயதன்றென்றுகருதித் 'தூய காரிய வேதுச் சுபாவம்' என்று தூயதுகண்டு சொல்லத்தொடங்கினமையால், இங்கு அதனின் வேறாகவே ஒருதாரணங் காட்டியிருக்கவேண்டும்.

அவ்வாறு காட்டப்பட்டிருக்கவேண்டிய காரிய காரணானுமானங்களின் உதாரணவடிவங்கள் ஒன்றும் இப்போது மணிமேகலையிற் புலப்படுதற்கு இடனில்லாமையால் அவை வேறுதாரணங்களால் இங்கு நிரூபிக்கப்படும்.

## I. தூயகாரியானுமானம்.

### 1. அன்னுவயப்பகுதி.

1. இம்மலை நெருப்புடைத்து.
2. புகையுடைமையால்.
3. யாது யாது புகையுடைத்து, அது அது நெருப்புடைத்து; அடுக்களைபோல.
4. இதுவும் அங்ஙனம் (அடுக்களைபோலப் புகையுடையது).
5. ஆதலின் இங்ஙனம் (அடுக்களைபோலப் புகையுடைமையால் நெருப்புமுடையது).

என்பதாம்.

### 2. வெதிரேகப்பகுதி.

1. இம்மலை நெருப்புடைத்து.
2. புகையுடைமையால்.
3. யாது யாது நெருப்பில்லாதது, அது அது புகையுமில்லாதது; மடுப்போல.
4. இஃது அங்ஙனமன்று (புகையில்லாததன்று).
5. ஆதலின் இங்ஙனமன்று [புகையில்லாததன்றாதலால் நெருப்பில்லாததன்று (நெருப்புடையது)].

என்பதாம்.

இவ்வனுமானத்துள், துணிபொருள் நெருப்பு. அதன் காரியம் புகை. துணிபொருளின் காரியப்பொருளாகிய புகையேதுவாய் நின்று, அதன் காரணப்பொருளாகிய நெருப்புண்டெனத் துணிதற்குக் கருவியானமையால் இது காரியானுமானமாயிற்று.

## II. தூய காரணானுமானம்.

### 1. அன்னுவயப்பகுதி.

1. பசித்துவந்த சாத்தன் பசிதீர்ந்தானானன்.
2. வயிறாரச்சோறுண்டமையால்.
3. எவனெவன் வயிறாரச்சோறுண்டான், அவனவன் பசி தீர்ந்தானானன்; திதியுணவுண்டான்போலும்.
4. இவனும் அங்ஙனம் (வயிறாரச் சோறுண்டான்).
5. ஆதலின் இங்ஙனம் [வயிறாரச்சோறுண்டமையால் பசி தீர்ந்தானானன்]

என்பதாம்.

### 2. வெதிரேகப்பகுதி.

1. பசித்துவந்தசாத்தன் பசிதீர்ந்தானானன்.
2. வயிறாரச்சோறுண்டமையால்.
3. எவனெவன் பசிதீராதான், அவனவன் வயிறாரச்சோறுண்ணாதான்; விரதோபவாசிகள்போல.
4. இவன் அங்ஙனமல்லன் (வயிறாரச் சோறுண்ணாதானல்லன்).
5. ஆதலின் இங்ஙனமல்லன் [வயிறாரச்சோறுண்ணாதானல்லனாகலின் பசிதீராதானல்லன் (பசிதீர்ந்தானானன்)].

என்பதாம்.

இவ்வனுமானத்துள், துணிபொருள் பசிதீர்தல்; அதற்குக் காரணமான வயிறாரவுண்ணல் ஏதுவானமையால் இது காரணானுமானமாயிற்று.

தூயசாமானியானுமானம் இனி ஆராயப்படும்.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

ஸ்ரீ:

# தமிழின் சிறப்பியல்பு.

தமிழ்மொழியில் பிறமொழிகளில் இல்லாத கல்விமுறை ஒன்று தொன்றுதொட்டுக் கற்பிக்கப்பட்டுவருகிறது. அது தமிழ் மொழிக்குச் சிறப்பான பொருளிலக்கணமேயாம்.

ஒவ்வொருபாஷையிலும் அவ்வப்பாஷையைப் பிழைபடாது வழங்கிவருதற்கும் எளிதில் உணர்தற்கும் உதவியாகப் பாஷா சாஸ்திரங்கள் (வழக்குநூல்கள்) உண்டு.

அவை அவ்வப்பாஷைக்குரிய சொல்லிலக்கணங்களைமட்டும் சொல்லுமேயன்றி, செய்யுள்வழக்கிற்குரிய பொருளிலக்கணம் ஒன்றை வேறாகப் படைத்துக்கொண்டு சொல்லுவனவல்ல.

தமிழ்க்குரிய பாஷாசாஸ்திரம், வழக்குநூல் என்னும் பெயருடையதாய், தமிழ்ப்பாஷையை உலகவழக்கு, செய்யுள்வழக்கு என இரண்டுவகையாகப் பகுத்துக்கொண்டு, உலகவழக்கிலக்கணங்களை எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் என இருவகைப்படுத்தி இரண்டுஅதிகாரங்களால் அவற்றைச் சொல்லுகிறது; செய்யுள்வழக்கிலக்கணங்கள் பலவும் பொருளதிகாரத்தாற் சொல்லப்படுகின்றன.

செய்யுளுள் சுவைநயந்தோன்றச் சொல்லப்படும் பொருள்களுள் சிறந்த இன்பச்சுவைக்குரிய காமத்தைச் செய்யுளகத்து வெளிப்படக்கிளப்பது அசப்பியம் (இழிவழக்கு) ஆகும் என்பதுபற்றி அதனை சப்பியம் (நன்மக்கள்வழக்கு) ஆகும்படி அந்தரங்கமாக மறைத்துக்கூறவேண்டும் என்னும் கருத்தால் அகப்பொருள் என்றுபெயரிட்டு ஒருபகுதியாக்கியும், அக் காமத்தின் வேறாயுள்ள பிறபொருள்களையெல்லாம் பகிரங்கமாகக்கூறலாம் என்பதுபற்றிப் புறப்பொருள் என்று பெயரிட்டு வேறொருபகுதியாக்கியும் இலக்கணங் கூறப்பட்டிருக்கிறது.

இக்கருத்துப்பற்றியே அகத்திணை ஒழுக்க (காமவொழுக்க) த்திற்குரிய காதலர்களாகிய தலைவன்தலைவிகளுடைய உண்மையான ஊர், பெயர் முதலிய ஒன்றும் கூறலாகாதென்றும், அவை திணைபற்றிய சங்கேதப்பெயர்களால் வழங்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டுள்ளன.

இவ்விலக்கணங்கள் தமிழ்ப்புலவர்களுக்கு, காம ஒழுக்கத்தை வெளிப்படக்கூறுது மறைத்துப்பேசவேண்டும் என்னும் நாகரிக முதிர்ச்சியைக் கற்பிக்கின்றன.

அகத்திணையொழுக்கம் களவு கற்பு என இருவகையாகப் பகுக்கப்பட்டிருக்கிறது.

களவொழுக்கமாவது: தமக்கு ஒப்பும் உயர்வு மில்லாத காதலனும் காதலியும் தெய்வாதீனமா யெதிர்ப்பட்டுத் தாமே கூடும் கூட்டம். இக்கூட்டம் சிலகாலம் நிகழாநிற்கச் சிறிதுசிறிதாகப் புறத்தார்க்குப் புலனாகி அம்பலும் அலரும் உண்டாவதறிந்து காதலன் காதலியை உற்றாரும் பெற்றாரு முணர மணந்துகொண்டு கற்பியலொழுக்கத்தவனாவான் எனக் காவியமரியாதை என்னும் புலனெறி வழக்கம் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறொழுகுங் களவொழுக்கத்திடையும் கற்பொழுக்கத்திடையும் காதலர்கூட்டத்துக்குரிய பலபல நிகழ்ச்சிகளேயும் வரிசைப்படுத்தி, இன்பச்சுவைபெறப் பாடுதற்குரிய பலபகுதிகளும் கிளவிகளுமாகப் பாகுபாடுசெய்து இலக்கணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விருவகை யொழுக்கத்திற்கும் இலக்கியம், முறையே வள்ளியையும் தெய்வயானையையும் செவ்வேள் மணந்தது பொருந்துவதாகும். இக்கருத்து, பரிபாடல் 9–ஆம் பாட்டில் 12–ஆம் அடி தொடங்கி 26–ஆம் அடிமுடியவுள்ள அடிகளால் நான்மறைப்புலவரைநோக்கித் தமிழது சிறப்புக்கூறுமுகத்தால் கூறப்பட்டிருப்பதாலறியலாம். அவை வருமாறு:—

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது
காதற் காமங் காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலிற் சிறந்தது கற்பே யதுதான்
இரத்தலு மீதலு மிவையுள் ளீடாப்
பரத்தையுள் ளதுவே பண்புறு கழறல்
தோள்புதி துண்ட பரத்தையிற் சிவப்புற
நாளணிந் துவக்குஞ் சுணங்கறை யதுவே
கேளணங் குறமனைக் கிளந்துள சுணங்கறை
சுணங்கறைப் பயனும் ஊடலுள் ளதுவே, அதனால்,

அகற லறியா வணியிழை நல்லார்
இகறலைக் கொண்டு துனிக்குந் தவறிலரித்
தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்''

என்பது.

இவ்வடிகளால், கற்பினும் களவொழுக்கமே மிக்கதோரின்பம் பயப்பதென்று காட்டப்பட்டிருக்கிறது.

களவு கற்பு என்னும் இருவகைக்காமநுகர்ச்சிகளைக் கைக்கிளைமுதலாகப் பெருந்திணையிறுதியாக எழுதிணைகளாகப் பகுத்து, ஒவ்வொருதிணையிலும் அததற்குரிய பகுதிகளும் கிளவிகளுமாக வகுத்து, இலக்கணங்கள் உரைக்கப்பட்டன. அவ்வத்திணையும் துறையும்பற்றி சங்ககாலப்புலவர்கள் பாடிய தனிப்பாக்களும் பல தொகுக்கப்பட்டன. அவை கலித்தொகைமுதலியன.

பிற்காலப்புலவர்கள் 'அகப்பொருட்கோவை' என்னும் பிரபந்தப்பாடல்களால் காமஇன்பத்தை அடிதொடங்கி முடியுமளவும் நிகழும் நிகழ்ச்சிகளெல்லாம் விளங்கச்செய்தனர். அவற்றால், ஒப்புயர்வற்ற காதலர்நுகரும் காம இன்பம் இத்தன்மைத்தெனக் காட்டப்பட்டதுபோல் விளங்கும். அதாவது: முதலில் அவ்வின்பத்தில் அக்காதலர்க்குள்ள வேட்கைமிகுதியும், அதனை எய்துதற்கு அவர்கள் வருந்தும் வருத்தமிகுதியும் புலனுதலுடன், அவ்வொழுக்கம் வளரவளர அவ்வின்பம் தளரும் தளர்த்தியும், அவ்வின்பத்துய்த்தற்கு இடையே நிகழுந் துன்பங்களும் அனுபவித்துக்கொண்டுபோந்து, அதன் நிலையாமைகண்டு உவர்த்துத் துறவில் மனம் செல்லுமளவும் காணப்படும் என்பதாம். இக்கருத்துக் கொண்ட செய்யுளும் ஒன்றுண்டு; அது,

'முன்னு ளிருவரும் யாக்கையொன் ருக முயங்கினம்யாம்
பின்னுட் பிரியன் பிரியையென் ருயினம் பேணுகின்ற
இன்னுட் கணவன் மனைவியென் ருயினம் எண்ணில்இனிச்
சின்னுளி லெப்படி யோதெரி யோம்விதி செய்வதுவே'

என்பது. இதனல், களவொழுக்கம் நிகழும் காலத்தில் காதலிருவர்க்கும் உயிர் ஒன்ருயிருந்ததேயன்றி உடலும் ஒன்ருயிருந்தது என்று சொல்லும்படி ஒருவாற்ருனும் சிறிதும் வேறுபாடில்லாத முயக்கமுற்றிருந்தார்களென்றும், பின்பு களவு சிறிதுசிறிதாக

வெளிப்படத்தொடங்கி அம்பலும் அலரு முண்டாய்க் கூட்டம் இடையறவுபடுதலால், வரைந்துகொள்ளுமளவும், ஒருவர்க்கொருவர் மிக்க பிரியமுள்ளவர் என்னும்படி சிறிது வேறுபட்டவாராயொழுகிவந்தாரென்றும், பின்பு வரைந்துகொண்ட கற்பொழுக்கத்தில் புதல்வரைப் பெறுமளவும் அறத்தாறொழுகுதலால், விலக்கிய நாளொழிந்தும், குரவர்கட்டளைக் கிசைந்தும், மகப்பேறு என்னும் பிறிதொரு பயன்கருதியும் கூடுதலால், முன்னையநிலைகளின் வேறுபாடுதோன்றக் கணவன் மனைவி என்னும் முறையுடையராய் வாழ்ந்தனர் என்றும், இனி வருங்காலநிகழ்ச்சி தாபதநிலையோ? பிறிதோ? அறிதற்கியலாது வேறுபட்டு விலகுவது என்றும் நிரலே பொருள்கள் விளங்கநின்றமையால், காமபோகத்திலுள்ள உயர்ந்த இன்பமும் நாளடைவே உவர்ப்புடையதாகித் துறக்கத்தக்க துன்பமும் நிலையாமையும் உடையதென்பதைக் காட்டும்படியாய்த் தமிழில் அகப்பொருளிலக்கணம் செய்யப்பட்டிருக்கிறதென்பது விளங்குகிறது.

இவ்வாறே புறப்பொருளிலக்கணங்களும், அறத்தொடுபட்ட காமவின்பநுகர்தற்கு இன்றியமையாத பொருளீட்டவேண்டியும் காக்கவேண்டியும் பகைவரிற் போர்புரிதலும் வெற்றிதோல்விகளிற் றுன்பமும் பொன்றலும் கையறுநிலைகளும் முதலிய பொருள்பற்றிக் கூறப்பட்ட பலவகையான திணை துறைவகைவரிசையால், ஒருவர் உயிர்வாழ்க்கையில் அவரவர்நிலைமைக்கேற்றவாறு நிகழும் நிகழ்ச்சிகளின் இன்பதுன்பக்கூறுபாடுகளையும், உலகவாழ்க்கையின் நிலையாமையையும் காட்டித் துறக்குமியல்பைத் தோற்றுவித்தலால், தமிழ்ப்பாஷையின் இலக்கணமாகிய வழக்குநூல், அதனைக் கற்கும்போதே, அறம் பொருள் இன்பம்: என்னுமிவற்றின் கூறுபாடுகளும், அவை இன்பதுன்பங்களிரண்டும் விரவியனவென்பதும், நிலையாமையுடையனவென்பதும் பிறிதொருநூல்வேண்டாம லறிந்துகொள்ளும்படி அமைக்கப்பெற்றிருப்பது தமிழ்மொழிக்கொரு சிறப்பாயிற்று.

**திரு. நாராயணையங்கார்,**

பத்திராசிரியர்.

உ

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உசு-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

## இலங்கை யெரியூட்டுபடலம்

அனுமான் இலங்கையைக் கொளுத்தியதைக் கூறுவது. ஊர் சுடுபடலம் என்றும் பிரதிபேதமுண்டு.

### இலங்கை தீப்பற்ற, இராக்கதர் கூக்குரலிடல்

[அனுமானது வாலின் தீ, இலங்காநகரத்து வீடுதோறும் புகுந்து, கொடி விதானம் தூண் சுவர் முதலியவைகளைச் சுற்றிப் பற்றியெரித்தது. அதனால், அந்த நகரத்துள்ள அரக்கர், அஞ்சி அங்குமிங்கும் அலைந்து கூக்குரலிட்டனர்.

### அரக்கர் அரக்கியர் மயக்கம்

சிவந்த மாணிக்கமணிகளிழைத்த மாளிகைகளில், தீச்சுவாலை பற்றியபகுதியும் அந்தச்சுவாலை பிரதிபலித்தபகுதியும் வேற்றுமை தெரியாமையால், மாதர், எங்கே ஒதுங்குவதெனத் துணிய மாட்டாராய் மதிமயங்கி வருந்தினார்கள். போகுந்திசையறியாது புகைநடுவில் அகப்பட்டு அலையும் மாதர்களின் தோற்றம், இருண்ட சோலையிடையே உலாவும் மயில்களின் காட்சிபோன்றது. அரக்கரும் அரக்கியரும் தீச்சுவாலைபோலும் செம்பட்டமயிரின ராதலால், யார்தலை தீப்பற்றியது, யார்தலை தீப்பற்றாதது என்று தெரியாராய், ஒருவர்தலையில் ஒருவர் மாறிமாறி நீர்சொரிந்து தீயவியவில்லையே என்று திகைத்தனர். ஒரு பிள்ளையை ஒக்கலில் வைத்து, ஒருபிள்ளையைக் கையிற்பிடித்துப் பலபிள்ளைகள் அழுதுதொடர, அரக்கியர் கதறிக்கொண்டு கடலில்விழுந்தனர்.

### பல தீக்கள் ஒன்றுபடல்

அடுப்புத்தீ விளக்குத்தீ ஓமத்தீ முதலிய பலதீக்கள், பகுத்தறியப்படாதபடி, வீடுமுழுதும் பற்றி ஏகமாக எங்கும் பரந்தெரியும் தீயொடு ஒன்றுபட்டது, பல சீவான்மாக்கள், முத்திநிலையில் வேற்றுமையில்லாதபடி, எங்கும் வியாபகமான பரமான்மாவோடு ஐக்கியப்பட்டிருப்பதுபோன்றது.

### தீப்பற்றிய யானைகள் முதலியவை

தீயினால் தாக்கப்பட்ட யானைகள், கழுத்திற் கட்டிய கயிறுகளையும் காலிற் பூட்டிய விலங்குகளையும் அறுத்து, தம்மைக் கட்டியிருந்த தூண்களைப் பறித்துக் காதை அசையாமல் நிறுத்தி, வாலை முதுகின்மேல் நீட்டித் துதிக்கையைத் தூக்கி வீரிட்டுக்கொண்டோடின. தீப்பற்றித் தோலுரிந்த யானைகள், இந்திரனது வெள்ளை யானைபோன்றன. தீக்குப் பயந்து கடலில்விழும் எருமைகள் மேகங்கள்போல, மாதர்கள் அன்னங்கள்போன்றனர்.

வண்டுகள், செந்தாமரைக்காடென்று மயங்கித் தீச்சுவாலையில் வீழ்ந்து இறந்தன. தீயினால் வெந்த மேகத்தின் நடுவே சூரியன் துலங்கும் தோற்றம், உலைக்கரிமத்தியில் உருகித்திரண்ட பொற்பிழம்பின் நற்காட்சிபோன்றது. தீக்குப் பயந்து கடலில் விழுந்த இராக்கதரின் செம்பட்டமயிர் எங்கும் தோன்றலால், கடலே தீப்பற்றி எரிவதுபோன்றது.

### புகையின்மிகுதி

கொழுநரைத்தேடிப் புகையுள்ளே புகுந்த அரக்கியர், மேகத்துள் மறையும் மின்கள்போன்றனர். தங்கள் மாளிகைகள் தீப்பற்றியெரியக்கண்டு தப்பிப் பிழைக்க விண்மீதே சென்ற 'இலவினும் சில முத்துள வெனும் நகை* இளையார்' ஆன இராட்சசிகள், புகையாற் சூழப்பட்டுத் திரைமத்தியில் உள்ள சித்திரப் பாவைபோன்றனர். இலங்கைமுழுதும் பற்றியெரியும் தீயின் புகை யெங்கும் பரவியதனால், அன்னங்களுக்கும் காகங்களுக்கும், பாற்கடலுக்கும் வேறுகடல்களுக்கும், வெள்ளிமலைக்கும் வேறு மலைகளுக்கும், வெள்ளையானைக்கும் வேறுயானைகளுக்கும் வேற்றுமைதெரியமுடியாதிருந்தது.

### இராவணன் தேவியருடன் இலங்கையை நீங்குதல்

ஊர் முழுதையும் சுட்ட தீ, இராவணன் அரண்மனையையும் சுட்டெரிக்கத்தொடங்கவே, அவன் தேவிமார் முதலியோருடன்

---

* இலவம்பூ இதழுக்கும் முத்து பல்லுக்கும் உவமை. நகை—பல்.

புட்பகவிமானமேறி, இலங்கையைவிட்டுப் போனான். ஆகாயகமனம் வல்ல மற்ற அரக்கர்களும் விண்மீது சென்று தீக்குத் தப்பினார்கள். அவ்வாறு தப்பிப்போகும் அறிவில்லாமையால், இலங்கைமாநகரம் இருந்த இடத்தேயிருந்து எரிந்து பாழாயிற்று.

தனக்கு எதிர்ப்பட்ட இராக்கதரை நோக்கி, இராவணன், 'இலங்கை எரியக் காரணம் என்ன?' என, அவர்கள், 'வாலைக் கொளுத்திய தீயைக்கொண்டு குரங்கு கொளுத்தியது இலங்கையை' என்றார்கள்.]

### இலங்கை எரிந்ததற்கு இராவணன் வருந்தல்

129. 'இன்று புன்றொழிற் குரங்குதன் வலியினால் இலங்கை
நின்று வெந்துமா நீறெழு கின்றது! செந்தீத்
தின்று தேக்கிடு கின்றது! தேவர்கள் சிரிப்பார்!
நன்று! நன்று!! போர் வலி' யென இராவணன் நக்கான்.

இ - ள். 'அற்பத்தொழிலுடைய குரங்கின் வலிமையினால், இன்று, இலங்கை, நின்று எரிந்து சாம்பல்பறக்கின்றது! நெருப்பு, (இந்த நகரத்தை) உண்டுவிட்டு ஏப்பமிடுகின்றது! (நமக்கு அடங்கியிருந்த) தேவர்கள் (அவருள் ஒருவனாகிய அக்கினி நம்மூரை எரித்ததுகண்டு) சிரிப்பார்கள்! நமது போராண்மை நன்றாயிருக்கிறது! (மிகவும்) நன்றாயிருக்கிறது!!' என்று இராவணன் (வெட்கச் சிரிப்புச்) சிரித்தான்.

புன்மை—அற்பம். நகுதல்—சிரித்தல். நக்கான்—சிரித்தான்.

### அனுமான் சீதையை வணங்கி விடைகொண்டு செல்லல்

[அனுமான், இனிச் சுடவேண்டிய இடமில்லையென்று வாலைக் கடலிலே தோய்த்துத் தீயை அவித்தான். விண்வழியே சென்ற வித்தியாதரர் 'ஊரெங்கும் பரவிய தீ, சீதையின் சாலை இருக்கும் சோலைக்கு அருகேயும் செல்லவில்லை'யென்று சொல்லக் கேட்டு, அனுமான், மகிழ்ந்துசென்று, சீதைபாதங்களில் விழுந்து வணங்க, அவள், அவன் சேமமாயிருப்பது தெரிந்து, கவலைநீங்கிக் களித்து வாழ்த்த, அவன், 'வணக்கம், விடைபெற்றுக்கொள்கின்றேன்' என்று கூறிச் சென்றான்.

### தீ அவிதல்

இனி நாமிருந்தால், அநுமான் துணையில்லாமையால், நம்மை அரக்கர் பிடித்து வருத்துவரென்று அக்கினிதேவன் ஒளித்துப் போயொழிந்தானென்னும்படி, இலங்கையை எரித்துக்கொண்டிருந்த தீ, அவிந்துபோயிற்று.]

இலங்கையெரியூட்டுபடலம் முற்றியது.

---

## திருவடி தொழுத படலம்.

அநுமான் (இலங்கையினின்று திரும்பிவந்து) இராமன் பாதங்களில் பணிந்ததைக் கூறுவது. இதன்பொருள், இராமனது திருவடிகளை அநுமான் தொழுத படலமென்று கூறுவதேயன்றித் 'திருவடி' என்னும் பெயருடைய அநுமான் இராமனைத் தொழுத படலமென்று கூறுவதும் உண்டு. கருடனைப் 'பெரிய திருவடி' யென்பதும் அநுமானைச் 'சிறிய திருவடி' யென்பதும் வைணவ சம்பிரதாயம். மீட்சிப்படலமென்றும் பிரதிபேதமுண்டு. மீட்சி – (அநுமான் இலங்கையினின்று) மீளுதல் – திரும்புதல்.

### அநுமான் இலங்கையினின்று புறப்பட்டு வழியில் மைநாக பருவதராசனைக் கண்டு மகேந்திரமலைக்கு வரக்கண்ட வானரர் மகிழ்ச்சி பாராட்டல்

[சீதையிடம் விடைகொண்டு சென்ற அநுமான், இலங்கைக்குப் பக்கத்தேயுள்ள ஒரு குன்றின்மீது, சூரியன் உதயகிரியை அடைகுவதுபோல, அடைந்து, தன் இயற்கைப் பெருவடிவு கொண்டு, விண்வழியே விரைந்துசென்று, மைநாகபருவதராசனுக்கு, முன் இலங்கைக்குப் போகும்போது வாக்களித்திருந்தபடி அந்த மலையில் இறங்கி, விருந்தருந்தி, இலங்கையில் நிகழ்ந்த செய்திகளைக் கூறி, விடைபெற்றுப் புறப்பட்டுத் தான் திரும்பி வருகையை விரும்பி எதிர்பார்த்துக்கொண்டு தெற்கு நோக்கிய வண்ணமாய் மகேந்திரமலைமேலிருந்த அங்கதனுதியர்முன்பு வந்து குதித்தான். அவன் முகப்பொலிவினால், சென்றகாரியம் சித்தியானதென்று தெரிந்துகொண்ட வானரவீரர்கள், தமக்கு இரை

தேடிக்கொண்டுவர வெளியேபோயிருந்த தாய்ப்பறவை வரக் கண்ட குஞ்சுகள்போல, அவன் வரக்கண்டு மகிழ்கூர்ந்தார்கள். அந்த மகிழ்ச்சிமேலீட்டால், சிலர் ஆடினார்கள், சிலர் பாடினார்கள், சிலர் ஆர்த்தார்கள்*, சிலர் அவனை விழுங்குவார்போலப் பார்த்தார்கள். சிலர் தூக்கிச் சுமந்தார்கள். சிலர் இனிய கனிகளையும் தேனையுங் தேடிக்கொண்டுவந்து எதிரே வைத்து 'இவைகளை உண்டு இளைப்பாறுக. நீ வினைமுடித்து மீண்டுவந்தாயென்பது விளம்பாமலே விளங்குகின்றது. இப்போது உண்ணுக. உண்ட பின் விவரமுரைக்கலாம்' என்று உபசரித்தனர். சிலர் அவன் தலையிலும் முகத்திலும் தோளிலும் மார்பிலும் கையிலும் காலிலும் அம்புமுதலிய ஆயுதங்கள் செய்த காயங்களைக் கண்டு கசிந்துருகி உயிர்போவார்போன்று வருந்தினார்கள்.

### அனுமான், அங்கதனுதியரை வணங்கி, அவர்களெல்லாரையும் சீதை வாழ்த்தினளென, அவர்கள் தென்திசைநோக்கித் தெண்டனிடல்

அனுமான், முதலில், இளவரசனை அங்கதனையும், பின்பு, ஆண்டில் முதிர்ந்த சாம்பவானையும்வணங்கி, மற்றவர்களுக்கு உரிய மரியாதைகளை முறையாகச் செய்து, 'இங்கே உள்ளாரெல்லாருக்கும் எம்பெருமாட்டி வாழ்த்துக்கூறினள்' என்றான். எனவே, எல்லாரும் எழுந்து, சீதையிருந்த திக்குநோக்கித் தெண்டன்சமர்ப்பித்தார்கள். பின்பு, அவர்கள், 'நீ சென்றதுதொட்டு வந்தது வரையும் நடந்த செயல்களை ஒன்றும்விடாமல் உரைப்பாயாக' என, அனுமான் கூறுகின்றான்:]

### அனுமான், இலங்கை நிகழ்ச்சிகளில் தன் வீரச்செயல்களைக் கூறுது மற்றவைகளைக் கூறல்

130. ஆண்டகை தேவி உள்ளத் தருந்தவம் அமையச் சொல்லிப்,
பூண்டபே ரடையா ளங்கைக் கொண்டதும் புகன்று, போரில்
நீண்டவாள் அரக்க ரோடு நிகழ்ந்ததும் நெருப்புச் சிந்தி
மீண்டதும் விளம்பான், தான் தன் வென்றியை விளம்ப வெள்கி.

---

* ஆரவாரித்தார்கள்.

இ-ள். அநுமான், சீதையின் கற்பொழுக்கத்தைச் செவ்வையாக்ச் சொல்லி, (சூளாமணியாகிய) அடையாளத்தைக் கைக்கொண்டதையும் சொல்லித் தன் வெற்றியைத் தான்சொல்ல நாணியதனால், இராக்கதரோடு நிகழ்ந்த (போரில், தான் வென்ற)தையும் இலங்கையில் நெருப்பிட்டதையும் சொல்லாதுவிட்டான்.

ஆண்டகை—வீரன்; பெருமையிற் சிறந்தோன்: ஆண் தகை (-தன்மை) என்னும் இரண்டுசொற்கள், ஒன்றுசேர்ந்து, ஆண்டகையென ஒருசொல்லாகி, ஆண்மையென்னும் பொருளுடையதாய் ஆண்மையுடையானை உணர்த்தியது. ஆண்டகை தேவியென்பதற்கு இராமன் மனைவியெனப் பொருள்கொண்டால், முந்திய பாட்டில் உள்ள 'மருத்தின் மைந்தன்' (-வாயுவின்மகன்—அநுமான்) எழுவாயாம். பூண்ட-(சீதை) அணிந்த. வாள்—கொடுமை: வாளரக்கர் என்பதிற்போல; வாளரா என்பதிலும் வாள் கொடுமையை உணர்த்துதல் காண்க. செய்தவென்றியை, வென்றியை உரைப்ப, பாடபேதங்கள்.

ஆடவர்க்குத் தவநெறிபோல, மாதருக்குக் கற்புநெறியிருத்தல்பற்றிச் சீதைகற்பைத் தவமென்றான். அக் கற்பு, உடலைத் தூய்மையாக வைத்திருத்தலன்றி அதனினும் மிகமிக அருமையான, உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருத்தலும் உடையதென்பது விளங்க 'உள்ளத்து அருந்தவம்' என்றான்.

உள்ளக்கற்பு அருமையினும் அருமையானதென்பது, 'எம்பெருமானே! எனக்கு (ஒருவரன்று) ஐவர்கள் ஐம்புலன்கள் போலக் கணவராயிருக்கவேயும் (அம்மட்டில் திருப்தி அடையாமல்) இன்னும் வேறொருவன் கணவனாக வேண்டுமென்று என் மனம் உருகாநிற்கும். (ஆதலால் என்போலப்) பெண்ணாகப்பிறந்தவர்களெல்லாருக்கும், ஆடவரே யில்லாதிருந்தாலல்லாமல், நம்புதற்கில்லை' யென்று வசிட்டனது தருமபத்தினியான அருந்ததியையே ஒத்த சிறந்த கற்புடையாளான திரௌபதி கிருட்டிணனைநோக்கிக் கூறினாளென்னும் கருத்துடைய பாரதப்பாட்டினால் விளங்கும். அப்பாட்டு வருமாறு:—

'ஐம்புலன் களும்போல் ஐவரும் பதிகள்
ஆகவும், இன்னும்வே ருெருவன்
என்பெருங் கொழுநன் ஆவதற் குருகும்,
இறைவனே! எனதுபே ரிதயம்!
அம்புவி தனிற்பெண் பிறந்தவ ரெவர்க்கும்,
ஆடவர் இலாமையி னல்லால்,
நம்புதற் குளதோ?' என்றனள், வசிட்டன்
நல் அற மனைவியே அனையாள்.

(பழம்பொருந்துசருக்கம். உக)

இதனுல், திரௌபதி கற்புடையளல்லளென்று கருதலாகாது. மாதர்கள் கற்புநெறியில் ஒழுகுதல்போலத் தவநெறியிலொழுகும் தவசிகள், தம் மனம் தம்மைத் தீயவழியிற் செல்லும்படி தூண்டும் போது அதற்கு உடன்படாமல், தம் மனத்தை அடக்கி ஆண்டு தம் தவத்தை நெறிபிறழாது கடைபோகக் காத்தல்போலத் திரௌபதி தன் மனத்தின் வழிச்செல்லாளாய்க் கற்பைக்காத்தாளென்பது, அவள், கவிக்கூற்ருக 'வசிட்டன் நல்லற மனைவியே அனையா' ளெனப்பட்டதனுலும் 'யான் உருகுகின்றேன்' என்னுது 'என் மனம் உருகும்' என்றதனுலும் பெறப்படும். வேருெருவன் என் கணவனுக உருகும் என்மனம் என்ற திரௌபதி, பெண்ணுகப் பிறந்தவ ரெவரையும் நம்புதற்குளதோ? என்னுது, பெண்பிறந்தவ ரெவர்க்கும் நம்புதற்குளதோ? என்றதனல், (மேலே 'என்மனம்' என்றதுகொண்டு 'நம்புதற்குளதோ' என்பதன்முன் அவர்கள்மனம் என்பது வருவித்தற்பாலதாய், அவள், என்மனம் எனக்கு நம்புதற் குரியதாயில்லாததுபோல, பெண்ணுகப் பிறந்தவரெல்லாருக்கும் அவர்கள் மனம் அவர்களுக்கு நம்புதற்குரியதாயில்லையென்ருளென் பதும், அதனுல், மாதர்கள் மனத்தை அடக்கிக் கற்பைக் காத்தல் வேண்டுமென்று குறிப்பித்தாளென்பதும் பெறப்படும். இஃது, அகலிகைவெண்பாவிலுள்ள ஒருபாட்டை நினைவுறுத்துகின்றது. அது வருமாறு:—

நல்லார் உளத்தினிலும் நல்லா ரலார்உளத்தும்
பொல்லா நினைவு புகல்இயல்பே;— நல்லார்,
புகுந்தவுடன் அந்நினைவைப் போக்கிடுவர்; பொல்லார்,
மிகுந்துறைய விட்டிடுவர் வேட்டு.

(உறைய – தங்க. வேட்டு – விரும்பி.)

வானரர், 'நீ போர்செய்ததைப் புண்களும் வென்றதை மீண்டமையும் இலங்கையை எரித்ததைப் புகையும் சொல்லத் தெரிந்தோம்' எனல்

131. 'பொருதமை புண்ணே சொல்ல, வென்றமை போந்த தன்மை
உரைசெய, ஊர்தீயிட்ட தோங்கிரும் புகையே ஓதக்,
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்,
தெரிதர உணர்ந்தேம் பின்னர் என்இனிச் செய்தும்' என்றார்.

இ-ள். '(நீ இராக்கதரோடு போர்செய்து வென்றதையும் இலங்கையை எரித்ததையும் கூறினையில்லை. ஆயினும்,) நீ சொல்லாமலே,—போர்செய்தாயென்பதை (உன் உடம்பிலுள்ள) புண்கள் புகலுதலாலும், செயமடைந்தாயென்பதை நீ திரும்பி (க் குதூகலமாக) வந்தது கூறுதலாலும், இலங்கையை யெரித்தாயென்பதை (எரிபட்ட இலங்கையினின்று) உயர்ந்தெழுந்த பெரும்புகை (தூரத்துள்ள எங்களுக்குத் தோன்றிச்) சொல்லியதனாலும், எதிரிகளது பெருமையைச் சீதாதேவி திரும்பிவராதது செப்புதலாலும் தெளிவாகத் தெரிந்துகொண்டோம். இனிமேல் யாதுசெய்யக்கடவேம்? (அதனை இசைப்பாயாக.)' என்று (வானரவீரர்) கூறினார்கள்.

பொருதல் – போர்செய்தல். போந்த – வந்த. இருமை – பெருமை. இரும்புகை – பெரும்புகை. கருதலர் – (உடன்பாடாக) எண்ணாதவர்- (எதிரிடையாக எண்ணும்) பகைவர். மீண்டிலா – திரும்பாத. தெரிதர – தெரிய. தர, துணைவினை. செய்தும் – செய்வோம்.

புண்ணே, புகையே, செயலே என்பவற்றோடு இயைய, போந்தமை என்பதன்பின் ஏகாரம் வருவித்துக்கொள்க. அந்த ஏகாரம்,

செய்யுளாதலால் தொக்கது. நான்கு ஏகாரங்களும் பிரிநிலை; நீ சொல்லாமலே என்றபொருளை நயம்படக் குறித்தவை. பெருமை, கருதலர்களுடைய தொகைமிகுதியையும் வலிமைமிகுதியையும் உணர்த்தி நின்றது. சொல்ல, உரைசெய, ஓத என்பவற்றுக்குப் பின் அவற்றின் தொடர்பாகவந்த, (இயல்பாகக் காண்பிக்க என்னும் பொருளுடைய) காட்ட என்பதைச் (செயற்கையாகச்) சொல்ல என்று தெளிவாகப் பொருள்படும்படி பிரயோகித்துக் கவி, மோனையமைத்திருப்பது, கவனிக்கத்தக்கது. வானரவீரரெல்லாருக்குமாக, அவருள் ஒருவர்கூறியதை அவர்களெல்லாரும் கூறியதாகக் கூறியிருப்பது, சொல்லாமலே தெரியக்கூடியதாம்.

இந்தப் பாட்டு வாசாலகமென்னும் பேச்சுத்திறமையும் ஊகித்து உணரும் வல்லமையும் ஒருங்கு அமையச்செய்த சமத்காரமான கவிகளுள் ஒன்றாம்.

## வானரர் புறப்பட்டு மதுவனம் அடைந்து தேனுண்டு களித்துவிளையாடல்

[அனுமான், 'இராமபிரானுக்குச் சீதாதேவி சேமமாயிருப்பதைச் சீக்கிரமாகத் தெரிவித்து அவனது கவலையை அகற்ற வேண்டும்' என், எல்லாரும் ஒருமுகமாக எழுந்து புறப்பட்டுக் குறித்த இலக்குத்தப்பாமல் வேகமாகச் செல்லும் இராமபாணம் போல, விரைந்துசென்று உச்சிநேரத்தில் கிட்கிந்தைக்குக் கிட்ட இருந்த மதுவனத்தை அடைந்தார்கள். அங்கே, வானரத்தலைவர்கள், அனுமானைநோக்கி 'இலங்கைக்குச் சென்ற நீ சித்திபெற்றுத் திரும்பவேண்டுமேயென்ற கவலையினால் நாங்கள் நெடுநாள் ஊணுறக்கமின்றி வருந்தியிருந்தோம். நீ சிறிதுகாலம் வாராது தாமதித்திருந்தாயானால் செத்தேபோகவிருந்த எங்களைச் சாவாமற் காத்தாய். அப்போது காத்ததுபோல, இப்போது யாங்கள் பசியால் இறவாமற் காப்பாயாக' என்றார்கள். அவன் அவர்களைக் கூட்டிக் கொண்டு அங்கதனிடம் சென்றான். எல்லாத் தலைவர்களும், அங்கதனைக் கைகூப்பித்தொழுது 'உன் சேனை தாகத்தால் தவிக்கின்றது. இந்த வனத்தில் உள்ள தேன்கூடுகளை அவர்களுக்கு அளிக்கவேண்டும்' என்றுகூற, அதற்கு அவன் இசைந்தான்.

உடனே, வானரர்கள், தேன்கூடுகளினூடு, ஒருவருக்குமுன் ஒருவர் ஓடி, அக்கூடுகள் தொங்கும் கொம்புகளை ஒடித்து, தேனைத் தெவிட்ட உண்டு களிப்பாராயினர். ஒருவர் கைக்கொள்ள முயன்ற தேனை ஒருவர் கைக்கொண்டு ஓடுவர். ஒருவர் கையிலெடுத்து வாய்க்குக்கொண்டுபோகுந்தேனை ஒருவர்இடையேபுகுந்து பிடுங்கிக் கொள்வர். ஒருவர்மேலொருவர் விழுவர், ஏறுவர். ஒருவரையொருவர்தழுவுவர். இவ்வாறாக எல்லாரும் இனிதுகளித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

### வானரர் மதுவனத்தை அழிக்காதபடி அவ்வனத்துக் காவலாளர்தலைவன் ததிமுகன் தடுத்தவனை அங்கதன் ரத்தம்கக்கக்குத்திச் 'சுக்கிரீவனிடம் போய்ச்சொல்' என விடுதல்

அப்போது, அந்த மதுவனத்துக் காவலாளர்கள்கண்டு சீறிச் 'சுக்கிரீவாக்கினையை மீறி உங்கள் உயிருக்கு முடிவு தேடிக்கொண்டீர்கள்' என்று கூறித் தங்கள் தலைவன் ததிமுகனிடம் சென்று, 'நாம் காக்கும் மதுவனத்தில் அங்கதன்சேனை அவன் அனுமதி பெற்றுப் புகுந்து, எதிரிகளும் செய்யக்கூசும் அழிவைச் செய்து விட்டது' என்று தெரிவித்தார்கள். அவன், 'அப்பன்* பட்டபாடு †மகனுக்குத் தெரியாதுபோலும்' என்று சொல்லித் தனது படையுடன் மதுவனத்துள்ளே புகுந்தான். புகவே, அங்கே களித்துக் கொண்டிருந்த வானரர், கண்டு பயந்து, அங்கதனிடம்போய், அபயமிட்டு அடியில் விழுந்தார்கள். ததிமுகன், அங்கதனெதிரே சென்று, அவன்மீது ஒரு பாறையைப் பேர்த்தெடுத்து வீசியெறிய, அவன் அதனைப் புறங்கையால் விலக்கித் ததிமுகனைப் பிடித்து இரத்தங்கக்கக் குத்திச் 'சுக்கிரீவனிடம்போய்ச் சொல்' என்று சொல்லிப் போகவிட்டான். அங்கதன்சேனைவீரர், தங்கள் தலைவர்களுக்கு இனிய கனிகளும் தேனுங் கொண்டுவந்து கொடுத்து உண்பித்து உவகையோடிருந்தார்கள். இது நிற்க.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

* அப்பன் - வாலி. † மகன் - அங்கதன்.

௯.

# ரமாமணி.

[௭௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## 7-ஆம் அதிகாரம்.

---

### கதையின் முடிவு.

𑌅𑌵𑌧𑌾𑌨𑌪𑌰𑍇 𑌚𑌕𑌾𑌰 𑌸𑌾
𑌪𑍍𑌰𑌲𑌯𑌾𑌨𑍍𑌤𑍋𑌨𑍍𑌮𑌿𑌷𑌿𑌤𑍇 𑌵𑌿𑌲𑍋𑌚𑌨𑍇 ।
𑌨 𑌵𑌿𑌵𑍇𑌦 𑌤𑌯𑍋𑌰𑌤𑍃𑌪𑍍𑌤𑌯𑍋𑌃
𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌿𑌲𑍁𑌪𑍍𑌤𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥

(குமாரசம்பவம் 4-வது சருக்கம் 2-வது சுலோகம்.)

[மூர்ச்சைதெளிந்தவுடன், அவள் கண்களை நன்றாக விழித்துப்பார்த்தாள்; இடைவிடாமல் பார்த்துக்கொண்டிருந்தாலும் தெவிட்டாத, கண்களுக்குப் புலப்படாமல் தன் நாதன் மறைந்துவிட்டான் என்பதை அவள் அறியவில்லை.]

மணிராஜன் தீர்த்தபுரம் சென்று, அவ்விடத்திலே சில நாட்களைக்கழித்து, ருதுசாந்திமுகூர்த்தத்தை நடத்திக்கொண்டு சிலகாலம்சென்று தன்மனைவியுடன் முக்திபுரம் வந்துசேர்ந்தான். அங்கே ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி, அதிலே தன்மனைவியுடன் சிலகாலம் தங்கியிருந்தான்.

தனக்குத் தகுந்ததான ஓர் உத்தியோகம் தேடுவதற்கு அவன் முயன்றுகொண்டிருக்கையில், அவனது நன்னடக்கையையும் திறமையையும் கேள்விப்பட்டு, அவ்வூரில் ஒரு பெரிய ஜமீன்தார், தன்னிடம் அமைச்சனாக (திவானாக) இருக்கும்படி அவனை அழைத்தார்.

அப்படியே உத்தியோகம் அடைந்து அவனும் ஒழுங்காக வேலையைக் கவனித்து, ஜமீன் வருமானத்தையும் பெருக்கினன். ஜமீன்தாரும் சந்தோஷமடைந்து, தனது திவானுக்குச் சொந்தமாக ஒரு வீடு அமையுமாறு, அவனுக்கு நன்கொடையளித்தார். அந்த நன்கொடையைக்கொண்டு, மணிராஜனும் ஒரு வீட்டை விலக்குவாங்கிப் பழுதுபார்த்து அதில் இருந்துகொண்டு, முன்போலவே தன்னுடைய பூஜைகளையும் தர்மகாரியங்களையும் தவறுமற் செய்துவந்தான்.

ஜமீன்வேலைகளுக்காக அவன் அடிக்கடி வெளியூர்க்குப் போகவேண்டியிருந்ததால், சிறுபெண்ணான தன்மனைவிக்குத் துணையாயிருக்கும்படி, யோக்கியரும் பெரியோருமான ஒருவரை அவருடைய மனைவி மக்களுடன், குறைந்த வாடகைக்கு அவ் வீட்டிற் குடிவைத்தான்.

மணிராஜனும் வெளியூர்களுக்குப்போகாமலிருந்தநாட்களில் தன்வீட்டிலேயே இருந்து ஜமீன்வேலைகளையும் கணக்குகளையும் கவனிப்பான். ஜமீன்தாருக்கோ, அவனிடம் முழுநம்பிக்கையுண்டு. அவனுக்குக் கீழிருந்த எழுத்தாளர்கள் திறமையுள்ளவர்கள் அல்லர். அவர்களெல்லோருடைய வேலையையும் மணிராஜன் சேர்த்துப் பார்ப்பான். தனக்கு உதவியில்லையே எனத் தயங்கான். "க்ரியா ஸித்தி: ஸத்வே ஭வதி மஹதாம் நோபகரணே" (மகான்களுக்குக் காரியங்களை நிறைவேற்றுவது தங்களுடைய வலிமையைக்கொண்டேயாகிறது. வேறோர் உதவியாலும் இல்லை.) அன்றோ?

அவன் மனைவியும் படித்தவளாயும் புத்தியுள்ளவளாயும் இருந்தபடியால், அவனுடைய தமிழ்க்கணக்குகளைப் பார்ப்பதற்கு அவளும் உதவிசெய்துவந்தாள்.

அவனைக் கண்டுகொள்ளும்பொருட்டு அநேகம் பெரியவர்களும் சாஸ்திரமறிந்தோரும் சங்கீதவித்துவான்களுமான அந்தணர்கள் வருவார்கள். ரமாதேவி, நளபாகமோ பீமபாகமோ என அதிதிகள் வியக்கும்படி, அன்னம் கறி முதலியவற்றைச் சித்தம்செய்து, தனது நாயகனுக்குச் சமமான பந்தியில் அவர்களை

இருக்கச்செய்து, அன்புடன் அவர்கட்கு அன்னம் அளித்து உபசரிப்பாள். அவர்களும் வயிறார உண்டு, அவளை வாழ்த்திப்போவார்கள்.

இவ்வாறு ரமாதேவி மணிராஜன் உவப்புற வாழ்க்கை நடத்திவருங்கால் ஒருநாள் அவளது நாத்தனாரான சியாமா தன் கணவனோடும் குழந்தைகளோடும், ஸ்ரீஜகன்மாதாவின் தரிசனத்துக்காக, முக்திபுரத்தில் தன் அண்ணன்வீட்டுக்கு வந்துசேர்ந்தாள். தன்னுடைய புதிய மதனியின் அழகையும் திறமையையும் கண்டு தன் சகோதரரிடம் "அண்ணா என் புதிய மதனியானவள், வனதேவதையைக் காட்டிலும் ரூபவதி, என்ன அழகு? என்ன ஆதரவு?" என்று அடிக்கடி புகழ்ந்தாள். அவர்களெல்லோரையும் பல நாட்கள்வரை தன்வீட்டிலேயே வைத்து அன்புடன், ரமாதேவி ஆதரித்தாள்.

அவளுடைய நற்குணங்களைப்பற்றி வெகுவாகப்பேசியது போதும். கவி வேதநாயகம்பிள்ளை,

"காரியம் பார்ப்பாள் கணக்குமெழுதுவள்
காய்கறி யாக்கவும் கெட்டி - அவள்
கைபட்டால் வேம்பும் கரும்பல்லவோ ருசி
கண்டுநீர் மண்டுவீர் சட்டி - அவள்
ஊரிலே யாமிமார் நாத்திமார் எல்லோரும்
உவந்திடுங் கற்கண்டுக் கட்டி."

என்று பாடியிருக்கிறபடி அவள் எல்லோரிடமும் அன்புடனும் ஆதரவுடனும் நடந்துவந்தாள்.

மணிராஜனோ, சிவபூஜைமுதலிய சத்கர்மங்களை அனுஷ்டிப்பதுடன், முக்திபுரத்துக்குச் சமீபத்திலிருக்கிறதான, "பெரியமலை" என்ற திருத்தலத்துக்கு மனைவியுடன் சோமவாரந்தோறும் போய், அங்கே இருக்கிற புண்ணியதீர்த்தத்தில் நீராடி, மலையை வலம்வந்து, கோவிலில் பகவானுக்கு அர்ச்சனைசெய்வித்துவருவான். கார்த்திகைநக்ஷத்திரதினந்தோறும், தம்பதிகள் அங்கே சென்று பக்தியுடன் விசேஷமாகப் பூஜை நைவேத்தியம் செய்துவைப்பார்கள்.

இப்பொழுது ரமாதேவிக்கு நல்ல யௌவனப்பருவம். அவள் மார்புமுதலான அவயவங்கள் புஷ்டியை அடைந்து, யாவருடைய மனத்தையும் கவர்ந்தன. அநேகர் இவளைப்பார்த்து, "இவள்

பாக்கியவதி, பூர்வஜன்மத்தில் நல்ல பூஜைசெய்து இவ்விதமான உருவத்தைப் பெற்றிருக்கிருள்;'' என்று வியந்துபோவார்கள். கெட்டகுணமுள்ள வேறு சிலரோ, அவளுடன் பேசினுலே இன்பம் என நினைத்து, அவளுடன் வார்த்தையாடத்தொடங்குவார்கள். அப்பொழுது அவள் "அண்ணு! அப்பா! தாத்தா! வாருங்கள்; தங்களுக்கு என்னவேண்டும்? என்று அவர்களுடன் முறைவைத்துப்பேசுவதாலேயே, அவர்களுடைய கெட்டநினைவு மாறிவிடும்.

இவ்விதமாக ரமாதேவி தன் நாதனுடன் காலங்கழித்து வந்தாள். அவள் வீட்டுவேலைகளைக் கவனிப்பதோடு ஒழிவுள்ள நேரங்களில் ராமாயணம் பாரதம் முதலான இதிஹாசங்களின் தமிழ் மொழிபெயர்ப்பைக் கவனத்துடன் படிப்பதும், தன் கணவனுடன் 'ஜகதம்பிகை'யின் தரிசனத்துக்காகக் கோவிலுக்குப் போவதும், பெயர்பெற்ற பாகவதர்களால் செய்யப்பெறும் ஹரி கதைகளுக்குக் கணவனுடன் செல்லுவதுமாக நன்ருகக் காலத்தைக் கழித்துவந்தாள்.

மணிராஜன், தன்னுடைய அருமை மனைவியின்விஷயமாக மிகுதியாகச் செலவழித்துவந்தான். அவளுக்கு வேண்டிய புத்தகங்களை வாங்கிக்கொடுத்தான். பூஜை விரதம் முதலியவற்றுக்காக அவள் விரும்பியபடி பணங்களைக்கொடுத்தும் வந்தான்.

சிலநாட்கள் கழித்து அந்தத் தம்பதிகள் "நமக்குக் குழந்தைகள் பிறக்கவில்லையே! "அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி'', (பிள்ளையற்றவனுக்கு நற்கதியில்லை.) என்று சாஸ்திரத்தில், சொல்லியிருக்கிறதே'' எனக் கவலைப்பட்டார்கள். தம்பதிகளிருவரும் சேது முதலான தீர்த்தங்களில் நீராடிப் பாவபரிகாரமாகத் "திலஹோமம்'' முதலான காரியங்களையும் செய்துமுடித்தார்கள்.

அதனுலும் அவர்கட்கு மகவு ஒன்றும் பிறக்கவில்லை. இதனுல் ரமாதேவி துக்கித்து அழுதாள். மணிராஜன் எவ்வளவோ சமாதானம் சொல்லியும், அவளுக்கு ஆறுதல் ஏற்படாததால், காதம்பரி என்ற பாணபட்டருடைய கிரந்தத்தில், காதம்பரிதேவி தனக்குக் குழந்தைபிறக்கவில்லையே என்று வருத்தமுறுங்காலத்தில், அவளுடையநாதன் சமாதானமாகச் சொன்ன வசனங்களைப் படித்துப் பதம்பதமாகத் தமிழில் பொருள் சொன்னுன்.

"தெவி........................................"

"தேவியே! தெய்வத்தால் ஏற்பட்ட இந்த விஷயத்தில் நம்மால் என்ன செய்யமுடியும்? நீ அழுதது போதும், இனிமேல் அழ வேண்டாம். பெரும்பாலும் நாம், தெய்வங்களால் அனுக்கிரகிக்கத் தகுந்தவர்களாக இல்லை. நமக்குத் தெய்வசகாயம் இல்லை. நம்முடைய மனம் புத்திரனை ஆலிங்கனம்செய்வதால் உண்டாகிற அமிர்தத்தைப் பருகுவதான இன்பத்துக்குத் தகுந்ததாக இல்லை. புத்திரனைத் தழுவிக்கொள்வதான ஆநந்தத்தை அனுபவிக்க நாம் கொடுத்துவைக்கவில்லை. முன்ஜன்மத்தில் நற்கருமங்களை நாம் செய்யவில்லை. ஜன்மாந்தரத்தில் செய்யப்பெற்ற கர்மமே ஒருவனுக்கு இந்தஜன்மத்தில் பயனைக் கொடுக்கிறது. முன்ஜன்மத்தில் செய்யப்பட்டதான கருமத்தின் பலனையே மனிதன் இந்த ஜன்மத்தில் அனுபவிக்கிறான் என்பது நிச்சயம். தெய்வத்தால் ஏற்பட்டதை மாற்றுவதற்கு, மிகவும் திறமைவாய்ந்தவனாலும் முடியாது. மனிதனது முயற்சியாற் செய்யக்கூடிய எல்லாக் காரியத்தையும் நாம் அவசியம் செய்யவேண்டும். தேவி! பெரியோர்களிடம் பக்தியை அதிகமாகச் செய்வாயாக. தெய்வவழிபாட்டை இரட்டிப்பாகத் தேடிக்கொள்வாயாக. பெரியோர்கள் விருப்பின்படி நடந்துவருவாயாக", என்று மணிராஜன் அவளைத் தேற்றினான்.

இதைக்கேட்டுச் சற்றுத் தேறியவளாகி "ஏதி ஜீவந்த மாநந்த: நரம் வர்ஷ ஶதாதபி" (கஷ்டப்பட்டுக்கொண்டேனும் உயிரைப் பேணிக்கொண்டிருப்பவர்க்கு நூறுவருஷங்கள் கழித்தபின்பாவது சௌக்கியம் வந்தேதீரும்;) என்று இராமாயணத்திற் சொல்லியிருப்பதால், தனக்குப் புத்திரப்பேறு சற்றுத் தாமதித்தாவது கிடைக்குமெனத் தேறி, ரமாதேவி தெய்வபூஜைகளையும் பெரியோர் பணிவிடையையும் அதிகமாகச் செய்துவந்தாள்.

அவளது சரீரமும் அழகு வாய்ந்தது; சாரீரமும் மதுரமானது. கோவிலில் உலகமாதாவின் ஸந்நிதியில் ஏகாந்தமாக நின்றுகொண்டு, அம்மனின்தோத்திரமான கீதங்களை அவள் பாடிக்கொண்டிருக்கும்போது, கேட்போர்களின்மனது உருகிவிடும். பண்டிதர்களும், தமிழையே அறியாத யாத்திரிகர்களும் அங்கே

நின்று கவனத்துடன் கேட்டு, மறுமுறையும் அதையே பாடும்படி வேண்டிக்கொள்வார்கள்.

இவ்விதம் தம்பதிகள் மிகவும் அன்புடன் வாழ்ந்துவரும் நாட்களில், ஒரு நாள் மணிராஜனுக்கு நோய்கண்டது. ரமாதேவி தகுந்த வைத்தியர்களை வரவழைத்து அவனுக்கு மருந்து கொடுக்கும்படி செய்தாள். தன் நகைகளை ஒன்றொன்றாக விற்று வைத்தியர்களுக்கு வேண்டிய பணம் கொடுத்தாள். சுதேசி வைத்தியர்கள் அவனுடைய கைநாடிகளைப் பரீக்ஷித்துப்பார்த்துச் சிந்தூரம்முதலிய நல்ல ஔஷதங்களைக் கொடுத்தும் அவன் குணமடையவில்லை. தனது திருமங்கிலியத்தைத் தவிர மற்ற நகைகளை விற்றுச் செலவிட்டாவது, அவனுக்குக் குணம் உண்டானால் போதுமென ரமாதேவி நினைத்தாள். இங்கிலீஷ் வைத்திய(டாக்ட)ரைக்கொண்டு அவனுக்கு மருந்துகொடுக்கச்செய்தாள். அவனது நோய் 'கபவாதசுரம்' என்றும், அதற்குச் சரியான மருந்து கிடையாது என்றும், ஆனால் வேளைக்கு வேளை திரவமான உணவையே காலம் தவறாமல் அவனுக்குக் கொடுத்துவரவேண்டும் என்றும், நோய்கண்டநாள்முதல் ஏழாவதுநாள் இரவில் சுரம் அதிகரிக்கும் என்றும், அன்று இரவுகழிந்தால், அவன் பிழைப்பான் என்றும் இங்கிலீஷ் வைத்தியர் சொன்னார்.

அவர் சொன்னபடியே ரமாதேவி தன் கணவனைக் கவனித்து வந்தாள். ஏழாவது நாள் இரவில் நோய் அதிகமாகி, எட்டாவது நாள் விடியச் சற்றுக் குறைவடைந்தது. அவனுக்கு நோய்கண்டது முதல், வீட்டில் சூரியநமஸ்காரமும் ஹோமமும், கோவிலில் தெய்வங்களுக்கு அர்ச்சனையும் வேதம் கற்றறிந்த அந்தணர்களைக் கொண்டு செய்விக்கப்பெற்றன.

மணிராஜனும் நினைவுடன் நன்றாகப் பேசிக்கொண்டிருந்தான். நண்பர்களில் சிலர் பீடைவிலகும்படி அவனுக்குப் பிராயச்சித்தம் செய்தால் நல்லதென்று சொன்னார்கள். ரமாதேவி, அதையும் அந்தணர்களைக்கொண்டு செய்வித்தாள். மணிராஜனும் சற்றுக் குணம் அடைந்தவன்போல் காணப்பட்டான். ஆனால் பதினான்காவது நாள் இரவில் திடீரென 'ராம' 'ராம' என்கிற சத்தம் ரமாதேவியின்காதுகளில் விழுந்தது. அவள் திடுக்கிட்டுத் தன்னுடைய

நாயகனைப் படுக்கையில் பார்த்தபோது மணிராஜன்பிராணன் வெளியேறும் தருவாயில் இருந்தது.

அவன் தன் சமீபத்தில் திகைத்துநிற்கும் மனைவியைப் பார்த்து, ஒன்றும் சொல்லமுடியாமல் கண்ணீர்விட்டு, ராமநாம ஜபம்செய்துகொண்டே பரலோகமேகினன்........................... தர்மம் தலைகாக்கும் என்ற பழமொழியும் பொய்யாகிவிட்டது. பரோபகாரி என்று பெயர்பெற்ற சூரியனும் அஸ்தமனமானன்....

ரமாதேவி, ஆ! தெய்வமே! என்று, தன் நாதன் பாதங்களில் தலையை வைத்துக்கொண்டு, மூர்ச்சையடைந்தாள்.

அவளுடைய நெருங்கிய உறவினர் வந்து மணிராஜனுடைய இறுதிச்சடங்குகளைச் சரியாகச்செய்து ரமாதேவியை ஆற்றுத் தண்ணீரில் மூழ்கவைத்து வண்டியில் ஏற்றி வீடு கொணர்ந்து சேர்த்தார்கள்.

ரமாதேவிக்கோ மூர்ச்சை தெளியவேயில்லை. அவளிடம் மிகவும் அன்புடையவளான ஓர் மாதரசி அவள் முகத்தில் நீர் தெளித்துக் கஞ்சியையும் அவளுக்கு ஊட்டினள். அன்று முழுவதும் அவளுக்குப் பிரக்ஞை இல்லை. மறுநாள் விடிந்ததும் அவளுக்குச் சற்று நினைவுவந்தது. உடனே அவள் விரைவாகப் போய்த் தன் நாயகனிருந்த இடத்தைப் பார்த்து அங்கே அவனைக்காணுததால் அலறினள்; ஓலமிட்டாள்; உருண்டாள்; புரண்டாள்; முட்டினள்; மோதினள்; மறுபடியும் நினைவை இழந்தாள்.

இந்தத் துக்ககரமான சங்கதியை எழுத நமது எழுதுகோல் நகரவில்லை.

எவ்விதமாகவோ நாட்கள் கழிந்தன.

துக்கத்தை விசாரிக்க வந்த உறவினர்கள் சிலநாட்கள் அவளைத் தேற்றியிருந்து, அவரவர்கள் ஊர்களுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

ரமாதேவியோ தனியே இருந்து தன் நாதனின் பிரிவாற்றுமையால் பிரலாபித்து அழுதாள்.

உபமாநமபூத்விலாஸிநாம் கரணம் யத்தவகாந்திமத்தயா ।
ததிதம் கதமீத்ருஶீம் தஶாம் நவிதீர்யே கடிநா: கலு ஸ்த்ரிய: ॥

[குமாரசம்பவம்.]

ஆ! நாதா! உமதுதேகம் மிகவும் அழகுள்ளது என்ற காரணத்தால், அழகுள்ள ஆடவர்களுக்கு உவமையாய் இருந்தது. அப்படிப்பட்ட உமது சரீரம் எரிக்கப்பட்டுச் சாம்பலாய்விட்டது. உம்மையண்டினவளான எனக்கோ ஒரு குறைவையும் காணோம்; நான் சிதறிப்போகவில்லை; பெண்பிள்ளைகள் கடினசித்தமுள்ளவர்களே.

ஸ்வஜநாம் த்வயி ந ஜீவிதாம்
விநிகீர்ய க்ஷணபிந்நஸௌஹ்ருத: ।
நளிநீம் க்ஷதஸேதுபந்தநோ
ஜலஸங்காத இவாஸி வித்ருத: ॥

[குமாரசம்பவம்.]

கரையுடைந்த நீர்ப்பெருக்கானது அதிலுள்ள தாமரைகள் பொலிவழிய நீத்துச்சென்றதுபோல, யான் பொலிவழியுமாறு என்னைப் பிரிந்து அன்பு முற்று மிழந்து எங்கேயோ சென்று விட்டீரே; அது நியாயமா?

ரமாதேவி இவ்விதமாக அடிக்கடி துக்கப்படுவதைப் பார்த்து அவளுடைய தகப்பனர்,

"பிறந்தவனுக்கு இறப்பு நிச்சயம், இறந்தவனுக்கும் மறு பிறப்பு நிச்சயம்; நம்மால் விலக்கமுடியாத காரியத்தில் துக்கம் அடைவது முறையன்று. மானிடர்களின் சரீரத்தில், இளமையும் வளர்ச்சியும் மூப்பும் எவ்வாறு இயற்கையாகவே ஏற்படுமோ, அவ்வாறே வேறு சரீரத்தை அடைதலும் ஏற்படும். தைரியமுள்ளவன் அதைக்கண்டு மோகமடையமாட்டான்." என்று இவ்வாறு பகவத்கீதைவசனங்களையும், வேறு வேதாந்தவாக்கியங்களையும் அந்தப் பெரியோர் ரமாதேவிக்கு உபதேசஞ்செய்தார்.

அதனாலும் அவளுடைய துக்கம் மாறவில்லை. அவளது மனதுக்குச் சமாதானமும் ஏற்படவில்லை. அவள், துக்கமிகுதியால் தற்கொலைபுரிந்துகொள்ளலாம் என்றுகூட நினைத்தாள்.

அப்போது யாரோ ஒரு பெரியவர் சொல்லியிருந்ததான ஓர் உபநிஷத்துவாக்கியத்தை அவள் நினைந்தாள். அந்த வாக்கியம்,

> അസൂര്യാ നാമ തേ ലോകാ
> അന്ധേന തമസാവൃതാഃ।
> ലോകാംസ്താനുപ്രേത്യ ഗച്ഛന്തി
> യേ കേ ചാത്മഹനോ ജനാഃ॥

என்பது.

இதன் பொருள்: "சூரிய ஒளியே இல்லாமல், நெருங்கின இருட்டினால் எக்காலத்திலும் சூழப்பட்டவையான நரகலோகங்களைத் தற்கொலைசெய்துகொண்டவர்கள் அடைகிறார்கள்" என்பதாம்.

பிறகு அந்த எண்ணத்தை விட்டுவிட்டு, உற்ற துணையுடன் திவ்விய க்ஷேத்திரங்களுக்குப் போவதும், தீர்த்தாடனம்செய்வதுமாகக் காலத்தைக் கழித்துவந்தாள்.

இவ்விதமாகவே ரமாதேவி ஜபதபங்களை அநுஷ்டித்துக்கொண்டும், விரதங்களால் காயக்கிலேசம் செய்துகொண்டும் வந்தால், அவளுடைய மேனி துரும்புபோல் இளைத்தது. அவ்விதம் இருந்தும், அவள் தவறாமல் வந்தனைவழிபாடுகள் செய்துகொண்டு, தன் நாயகன் இருக்கும் பொன்னுலகத்துக்கே தானும் விரைவில் போகவேண்டுமென்ற நினைவுடன், சீலவதியாயும் ஞானவதியாயும் விளங்கினாள்.

## முடிவுரை.

'ரமாமணி' என்ற ஒரு சிறு நவீனகத்தை ஒருவாறு முடித்தோம். இது அமங்களமாய் முடிவுபெற்றது என்று நம்மவர்கள் நினைக்கக் கூடும். கதைகளிலோ, நாடகங்களிலோ மங்களமான முடிவுள்ளது (Comedy) அமங்களமான முடிவுள்ளது (Tragedy)

என இரண்டு வகுப்பு உண்டு. அவற்றுள், பின்சொன்னதே மிகவும் ரசமுள்ளது. ஆங்கிலக் கவிச்சக்கிரவர்த்தியான 'ஷேக்ஸ்பியர்' என்றவரின் 37 நாடகங்களிலும், (Hamlet) 'ஹாம் லெத்து' முதலிய அமங்களமான முடிவுள்ளவை(Tragedy)யான 5-6 நாடகங்களே மேற்றிசையோரால் மிகவும் விரும்பப்பட்டவை.

உலகத்தில் எல்லோருடைய வாழ்வும் மங்களமாகவே முடியும் என்ற நியமம் இல்லை. சிலருடைய வாழ்நாள் அமங்களமாகவும் முடிவடையக்கூடும். நமது நவீனகமும் மனித வாழ்வைக்குறித்து எழுதப்பெற்ற சரித்திரமாகையால், நடந்ததை நடந்தபடி எழுதினேம்.

இந்நவீனகம், "சாந்தி" ரஸத்தையே பிரதானமாகக் கொண்டதாயினும், மற்ற ரஸங்களும் அங்கங்கே செறிந்ததென்பது இதைக் கவனித்துப் படிப்போர்க்குச் சுலபமாய்த் தெரியவரும்.

ஶ்ருங்கார ஹாஸ்ய கருணா ரௌத்ர வீர பயாநகா: ।
பீபத்ஸாத்புத ஶாந்தாஶ்ச ரஸா: பூர்வைருதாஹ்ருதா: ॥

சிங்காரம், ஹாஸ்யம், கருணை, கோபம், வீரம், பயாநகம் (அதாவது பயத்தைக் கொடுப்பது), பீபத்ஸம் (அதாவது அருவருப்பைக் கொடுப்பது), அற்புதம், சாந்தம் என ஒன்பது ரஸங்கள் என்று அலங்காரசாஸ்திரத்தில் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மேலும், இந்நவீனகம் மங்களமாக முடிவுபெற்றதென்றே, நினைக்கவுங்கூடும்; நமது கதாநாயகியான ரமாதேவி சர்வ மங்களாதேவியான பரமேசுவரியிடம் பக்தி மிக்கவளாய்த், தேவியையே எப்போதும் தியானித்துக்கொண்டு வைராக்கியத்தையும் ஞானத்தையும் அடைந்தவளாகி விளங்கினள், என்று இந்நவீனகம் முடிவுபெற்றிருப்பது, முன் கூறிய ஆக்ஷேபணைக்குத் தகுந்த சமாதானமுமாகும்.

V. S. ராமஸ்வாமிசாஸ்த்ரி.

---

# மதிப்புரை.

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் சதாபிஷேகவரலாறு, ஐயரவர்களுடைய எண்பதாம் ஆண்டுநிறைவு விழாவில் அளிக்கப்பெற்ற உபசாரப்பத்திரங்கள் என்னும் இரண்டு புத்தகங்களுடன் (1) திருவள்ளுவரும் திருக்குறளும், (2) புதியதும் பழையதும், (3) கனம் கிருஷ்ணையர், (4) கோபால கிருஷ்ணபாரதியார் என்னும் நான்குபுத்தகங்கள் கிடைத்துள்ளன.

இந் நான்குநூலும் பிரும்மஸ்ரீ ஐயரவர்களால் ஆராய்ந்தெழுதி வெளியிடப்பட்டன.

1. திருவள்ளுவரும் திருக்குறளும்:—இந்நூலில், ஐயரவர்கள், முதற்பாவலராகிய தெய்வப்புலமைத்திருவள்ளுவரியற்றிய திருக்குறளி னுட்பொருளைப் பலதிறத்தாற் பகுத்து, யாவரு மறிந்து கொள்ளுமாறு ஆராய்ச்சிமுறையில் தெளிவுறுத்தியுள்ளமையால், இந்நூலைப் படிப்போர்க்குத் திருக்குறளைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை எளிதில் உணரலாம்.

இதன் விலை அணா 3.

2. புதியதும் பழையதும்:—இந்நூல் 'என்ன வேண்டும்' என்பது முதலாகச் 'சிறைநீக்கிய செய்யுள்' என்பதிறுதியாக உள்ள இருபது சரிதங்களை உட்கொண்டமைந்துள்ளது. இவற்றுட் சில சில தனிப் பாக்கள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தை யுட்கொண்டமைந்தன. இவை யொவ்வொன்றும் படிப்போர்க்கு அளவிலின்பம் பயப்பன.

இதன் விலை அணா 9.

3. கனம் கிருஷ்ணையர்:—இந்நூலில் சங்கீதமஹாவித்துவானாய் விளங்கிய கனம் கிருஷ்ணையரவர்களது சரித்திரம் நன்கு பகுத்துக் கூறப்பட்டிருப்பதுடன், ஷை கிருஷ்ணையரவர்களா லியற்றப்பெற்ற பல கீர்த்தனங்களும் தொகுத்துச்சேர்த்து உபகரிக்கப்பெற்றுள்ளன. இக்கீர்த்தனங்க ளொவ்வொன்றும் சங்கீதப்பயிற்சியுடையார்க்கு ஆன்ற பயன்றரற்குரியன.

இதன் விலை அணா 8.

4. கோபாலகிருஷ்ணபாரதியார்:—இந்நூலில், சங்கீதமஹா வித்துவானாய் விளங்கிய கோபாலகிருஷ்ணபாரதியாரவர்களுடைய இளமைப்பருவந்தொடங்கி முதுமைப்பருவம்வரை நிகழ்ந்த வரலாறு முழுமையும் தனித்தனியே பகுத்துக் கூறப்பட்டிருப்பதோடு ஷை பாரதியாரவர்க ளியற்றிய அரிய கீர்த்தனங்கள் பலவும் சேர்த்துப் பதிக்கப்பட்டுள்ளன.

இக் கீர்த்தனங்கள் சொற்பொருட்சுவை தழுவியவாய்ப் பத்திச்சுவை நிரம்பி யுள்ளன.

இதன் விலை அணா 8.

மேற்குறிக்கப்பட்ட புத்தகங்களை வேண்டுவோர், 'பிரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள், தியாகராஜவிலாஸம், பிள்ளையார் கோயில் தெரு, திருவேட்டீசுவரன் பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை' என்ற விலாஸத்திற் பெறலாம்.

---

கட்டுரைக்கலம்பகம்:—இது வித்வான். ச. கு. கணபதி ஐயர் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. இதில் இந்தியமாணவர் என்பது முதலிய எழு கட்டுரைகள் ஆராய்ச்சிமுறையி லமைக்கப் பெற்றுள்ளன.

இவை படிக்கும் மாணவர்க்குப் பழங்காலவரலாற்றை விளக்குவதோடு இன்பம்பயத்தற்கும் உரியனவாயிருக்கின்றன.

இதன் விலை அணா 10.

வேண்டுவோர், 'S. G. கணபதி ஐயர், 627, திருவல்லிக்கேணி ஹைரோட், திருவல்லிக்கேணி, சென்னை' என்ற விலாஸத்திற் பெறலாம்.

---

குலசேகராழ்வார்சரிதம்:—இந்நூல் சுசீந்திரம். ச. செல்லம் என்பவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. இதில் குலசேகராழ்வாருடைய நாடு, நகரம் முதலிய பலவும் தனித்தனியே பகுத்துக் கொண்டு ஆராய்ச்சிமுறையிற் கூறப்பட்டுள்ளன.

இது படிக்கும் மாணவர்க்கு ஆராய்ச்சிசெய்வதிற் பயிற்சியை உண்டாக்கவல்லது. இதன் விலை அணு 4.

---

கதாநிதி:—இது ஓர் மாதசஞ்சிகை; ஞா. ப. சதானந்தம் அம்மாள் அவர்களால் நாளிதுவரு ஆவணிமீ 12வ (1936வரு செப்டம்பர்மீ 1வ) முதல் மாதச்சஞ்சிகையாக வெளிடப்படுகிறது.

இதில் பல கற்பனைக்கதைகள் வெளிவருதலால் இது படிப்போருக்கு இனிய கதைச்சுவையுதவுவதாயுள்ளது.

இப்பத்திரிகையின் சந்தாவிவரம்.

| | |
|---|---|
| உள்நாட்டுக்கு வருடச்சந்தா | 1—8—0 |
| தனிப்பிரதி விலை | 0—2—0 |
| வெளிநாட்டுக்கு வருடச்சந்தா | 2—0—0 |
| தனிப்பிரதி விலை | 0—3—0 |

வேண்டுவோர், 'காரியஸ்தர், 'கதாநிதி' நிலயம், செறிரோடு, சேலம்' என்ற விலாஸத்திற் பெறலாம்.

---

நானார்த்ததீபிகை:—இது சூடாமணிநிகண்டின் பதினொன்றாந் தொகுதிபோல விருத்தப்பாவி னியன்று, எதுகைமுறைபற்றி ஒரு சொற்பல்பொரு ளுரைக்கும் பெரியதொரு நிகண்டுநூலாகும். ஆயிரத்துநூற்றிரண்டுசெய்யுட்களும் ஐயாயிரத்துநானூற்றைம்பத்திரண்டுசொற்களின் பொருளும் இதில் அடங்கியுள்ளன.

இந்நூலில், ககரமுதல் னகரவீறான எதுகையின் அடைவு கலப்புற்றுக்கெடாமலும், அடைமொழிகள்சார்ந்து சொற்பொருளுணர்ச்சிக்கு இடையூறுசெய்யாமலும் போற்றப்படுகிறது. அன்றியும் செவிக்குப் பலவகை ஓசைகளால் இன்பமுதவாத ஒரேவகை ஓசைதழுவிய ஏனைநிகண்டுகள்போலல்லாமல், இது பலவேறுவகையான விருத்தங்களிற் பாடப்பெற்றிருக்கிறது. இவையேயன்றி வடசொற்களின் விளக்கம் இந்நிகண்டிற்போல இத்துணைவிரிவாக வேறெவ்விடத்துங் காண்டலரிது. இத்தன்மையால் இது வடமொழிவிரவிய தமிழ்நடைப்பயிற்சிக்கு உறுதுணையாய் உதவவல்லது.

இந்நூல் ஏறத்தாழ எண்பதாண்டுகட்கு முன்னர் இயற்றப்பெற்றதென்று தெரிகிறது. இதன் ஆசிரியர், திருநெல்வேலி, கவிராயர் முத்துசுவாமிபிள்ளையவர்களாவர். இவர் முருகனருளாற் கவிவல்லராயினரென்றும், ஆரியம், தெலுங்கு, உருது முதலிய வேற்றுமொழியும் பயின்று விளங்கினரென்றும் சொல்லப்படுகிறது.

இவ்வரிய நிகண்டுநூலை, சென்னைச் சர்வகலாசாலையின் தமிழாராய்ச்சித்துறைத்தலைவராய் விளங்கும் ஸ்ரீமாந். சு. அநவரதவிநாயகம்பிள்ளையவர்கள் (M. A. L. T.) மிகச்செவ்வனம் ஆராய்ந்து உரையெழுதிப் பதிப்பித்துள்ளார்கள். தமிழ்நூற்புலவரும் ஆங்கிலப்பேரறிஞருமான பிள்ளையவர்களின் நூற்பதிப்புத்திறமை இப்புத்தகத்தின் ஒவ்வொருபகுதியிலும் நன்கு விளங்குகின்றது.

இது சென்னைச் சர்வகலாசங்கத்தின் ஆறாவது தமிழ்வெளியீடாகும். இத்தகைய தமிழ்ப்பணிபுரிதலானே இச்சர்வகலாசாலையும் தகவுடைத்தாகின்றது.

சுமார் எழுநூறுபக்கங்களில் நன்றாக அச்சிடப்பெற்ற இப்புத்தகத்தின் விலை ரூபா. 6. வேண்டுவோர் ஷை சர்வகலாசாலை அதிகாரிகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

காமக்கடுங்கன 78
காமம்வெகுளி 15
கார்க்குன்றுரீத் 83
கார்காட்டியார் 83
கார்தருசோலைச் 126
கார்வளர்சோலைச் 118
காரார்தருமிடற் 100
காரார்மணிகண்டத் 52
காராரறல் 95
காலனழிய 72
காலையுங்காய்க் 104
காவலர்காத 70
காவியினுர்மணிகண் 41
காவைப்பொருந்திக் 68
காளியொடு 38
கான்செய்த 100
கான்படர் 112
கானக்கடுக்கை 113
கானஞ்செறி 86
கானுர்கிழங்கு 49
குருவேயெனவரு 112
குருவேயெனவெனே 61
குளங்காட்டு 49
குன்றினையேந்து 42
குன்றேசிலை...கோல்64
குன்றேசிலை...கோற்33
கூடவிழைத் 131
கூற்றந்தனே 132
கையார்மழுப் 93
கோடுக்கக்
கொடுக்கக் 128
கொடுத்தலு 10
கொந்தார்குழற் 116
கொந்தார்தரு 135
கோங்கரும்பா 101
கோதாரும்பாசங் 63
கோபஞ்செறிதர 130
கோவாமணி 48
கோளாடரவணி 6
சங்கைக்குழை 36
சந்தார்பொழிலுங் 99
சாந்தமணி 75
சாரதபோதனர் 120
சிங்கநிரை 71
சித்தியைக் 15
சின்மயனுஞ் 39
சீர்கொண்டதாமரை 1
சீர்பூத்ததார் 1
சீர்மிகுமோரிறை 132
சீரார்சிராமலை 23
சீராரடிமலர் 11
சீராருமீசர் 3
சீரியரே 55
சுகமன்னு 45
சுடரன்றி 43
சுரக்குங்கருணைப் 71
செந்தாமரை 32
செப்பார்முலை 49
செல்லேனினே 93
செவ்வீரடி 107
சேடார்தரு 99
சேணேமருவுஞ் 33
சேய்க்குநிகரு 105
சேயகளபங் 117
சேயனையாளுெடு 107
சேயாரிதழ் 122
சேயானனங் 122
சேலாகி 79
சேலாய்த்திகழும் 66
சேலானகண் 20
சேலைப்பொரு 17
சேலையும்வேலையும் 53
சேவியலார்கொடி 4
சேற்றுர்கமல 116
சோலையின்மீ 66
ஞானம்பெற 55
நகரக்குழன் 95
தண்ணுர்கயத்திற் 73
தண்ணுர்புனல் 87
தண்ணுர்மதிமுடி 75
தண்ணுரமுத 93
தண்ணுருங் 13
தணியாமிகு 10
தந்தியடர்த்துப் 96
தந்தியைச் 62
தம்மனைவாழிடப் 62
தமராமொரு 133
தழைகொண்டு 44
தன்னம்புய 113
தன்னை...சாரலில் 108
தன்னை...தாழ்குழ 119
தன்னைப்பரமென 91
தன்னைப்புரந்து 114
தன்னையுணர்த்தித் 98
தனக்கேயுயிர் 41
தனத்தார்பசப்பும் 75
தனைமகிழ் 40
தாதைதன் 37
தாயாகிவங் 25
தாயுளுமலியு 69
தாயேயெனமகிழ்ங் 32
தாராரும்வேலவ 43
தானேதனக்கு 16
தானேயெனைத் 102
தானுென்றிரன் 29
தீக்கும்புலி 68
திகழ்தருமாரக் 119
திடமார்தரு 117
திருநாமகட் 101
திருவேமகிழ் 82
திரையார்தரு 38
தீதாருந்தீவினை 52
தீராததீவினை 15
துங்கன்சிரகிரி 72
துடியாரிடை 91
துடியொன்று 14
துடைத்துப் 5
துதிவழியே 32
துறந்தார்வினை 80
துன்பார்வினைப் 47
தூயகடவுள் 115
தெள்ளித் தெளித்த 31
தென்முகவேந்தை 5
தேடத்தகாத 126
தேடித்தலைவர் 121
தேடியமாலயன் 90
தேடுவராகமுங் 57
தேவாதிபர் 65
தேறினர் யாரும் 18

தேனார்குதலைத் 96
தேனார்மலர்சுரர்க் 122
தேனார்மொழி 46
தேனோடி 27
தொண்டரை 13
தோடிடுங்காதின 56
தோடுங்கலையுங் 9
தோடுறுகாதின 39
நங்கையொர் 34
நஞ்சமிளிர்களத் 113
நஞ்சார்தரு 97
நண்ணார்புர 30
நதிகொண்டசெஞ் 4
நதியாடர 26
நதியைச்சடை 56
நந்தார்கரன் 109
நந்தியையூர் 81
நம்புமவர்க்கருள் 89
நம்மனையே 109
நமக்குக்குல 95
நல்விற்பனர் 134
நற்றாய்வெறுத்திட 134
நன்றுடையானை 54
நன்னாககன்னியர் 120
நனவிலுடலுறு 125
நனையார்குழ 70
நாகம்புனைந் 110
நாதாந்தமீது 12
நாலாரணந்தொழு
  தேத்து 63
நாலாரணந்தொழு
  நம்மான் 109
நாளுமெனக்குத் 98
நானெனதென்னுஞ் 8
நிறையாருமின் 48
நின்றேகவன்றயர் 87
நீங்கரும்பாசந் 47
நீடுமிராய 86
நீதந்தகாமக் 60
நீரம்புலி 78
நீரார்சடை 67
நீரார்தருசடை 16
நீளுங்கயல் 94
நூலாகு 31
நெஞ்சேயெனக் 64
படிவான 22
பண்டுறுமார்வத் 125
பண்ணார்கிளி 76
பண்ணார்மொழி......
  பாகர் 9
பண்ணார்மொழி......
  பாகன் 48
பண்ணாரிசை 114
பண்ணியறேர்ந்தவர் 17
பண்பாலுயிர் 34
பண்பான்மறையவ 86
பணிகொண்ட 75
பணிந்தும் 58
பணியுமதியு 5
பத்தானன 77
பதியாதுரை 29
பந்தப்பவந் 86
பந்தனமாமுலை
  மானே 133
பந்தனமாமுலையாயுள 89
பரவைமனை 63
பரையொன்று 26
பற்றேதவிர்த் 105
பன்னவரும்புக 92
பன்னாடவங்க 14
பன்னாளகன்றமை 119
பன்னாளும் 45
பன்னுகலை 128
பாகத்தைமாதுக் 58
பாகமுறவுண 115
பாசமகற்றி 23
பாசமிகந்துயிர் 115
பாணினுஞ் 98
பாதிமதியணி 84
பாந்தளணிசடை 132
பாம்பாவை 128
பாயசலூனொடு 104
பாருந்.........திரிந்து 8
பாருந்......புகழும் 43
பாலாழி 50
பாவார்தரு 11
பானேர்மொழி 62
பிடிதானிகர் 51
பிறவாதவாழ்வு 77
பிறையார்சடைமுடி 19
பிறையார்சடையர் 51
பின்னார்தருசடை 122
பின்னுஞ்சடைக் 108
புயங்காபரணத் 92
புயமுற்ற 61
பூதங்கரணம் 91
பூதியணிபுயத் 105
பூபாலகரென் 131
பூமகள்கேண்மை 129
பூமாதுகேள்வ 130
பூமாதெனத் 117
பூவாழளி 28
பூவியைமா 21
பெண்ணார்தரு 41
பெண்பாலமர்ந் 104
பெண்பாலிடத் 88
பெண்பான்மகிழும் 125
பெண்மானனைய 19
பெம்மான்சிராமலை 23
பெம்மானெமக் 69
பேராத 118
பேறுகளிற் 127
பையாரரவல்குல் 119
போடிப்பாருட 67
பொய்வாழ் 14
பொருந்தாவுலோகம் 25
பொருமித்திரண்டு 10
பொருளாலிகபர 133
பொழியுங்கருணைப் 84
பொற்புக்கொருவரு 97
பொன்மணவாள 92
பொன்னாட்டவர் 57
பொன்னார்...பூண் 4
பொன்னார்...பூவை 45
பொன்னார்............
  போற்று 53
பொன்னாள்கண 6
பொன்னியல்வார் 91
பொன்னிவளந் 35

| | |
|---|---|
| பொன்னேதரு | 121 |
| பொன்னேயெழிற் | 107 |
| பொன்னைமருவு | 74 |
| போற்றார்புரக்கள் | 103 |
| மகத்தைப்புரியு | 33 |
| மங்கையைப் | 19 |
| மண்ணும்பர | 27 |
| மணிமிகவாருஞ் | 61 |
| மதிகொண்டசெம் | 21 |
| மதிபூத்த | 69 |
| மதிமுகமாகு | 3 |
| மருங்கோல | 27 |
| மருவளர்கொன்றை | 22 |
| மருவாச | 28 |
| மருவார்புர | 69 |
| மழுவார்தருகரத் | 116 |
| மறவாதகாத | 98 |
| மறியார்தரு | 71 |
| மன்றுணடம் | 73 |
| மன்றுணடித் | 76 |
| மனமுநிறையுங் | 50 |
| மாதங்கவோங்க | 26 |
| மாதார்தருமிடப் | 108 |
| மாதாரும்பாகத்த | 100 |
| மாதேநமர்கன் | 84 |
| மாதோர்மருங்கினர் | 42 |
| மாயாமலந்தவிர்த் | 103 |
| மாயாவிகாரத் | 60 |
| மாலாயுதம் | 68 |
| மாலையன்றாய் | 124 |
| மாற்றுமை | 76 |
| மாணார்தரு | 9 |
| மாணாரிடத்தினர் | 57 |
| மானைவினாவி | 42 |
| மின்காட்டி | 123 |
| மின்பூத்தவேணிப் | 70 |
| மின்னார்சடைமுடி | 18 |
| மின்னார்சடையிடை | 85 |
| மின்னாரல | 99 |
| மின்னாளுநுண் | 113 |
| மின்னேநிகர் | 85 |
| மூப்புரம்வேவ | 72 |
| முருந்ததி | 111 |
| முருந்தாமுறுவ | 55 |
| முலைகண்டு | 46 |
| முன்னாருள | 57 |
| முன்னாள்சிரமலை | 7 |
| முன்னூற்கலை | 29 |
| மூலாகமப் | 59 |
| மூவாத | 24 |
| மூவிலைவாய்ந்த | 30 |
| மெய்யரன்பால் | 3 |
| மெய்யருள | 96 |
| மெய்யுமை | 42 |
| மைக்காள | 135 |
| மையார்குவளை | 24 |
| மையார்விழிமட | 37 |
| மையார்விழியுமை | 79 |
| மையாரயில்விழி | 118 |
| மையாரிருட் | 60 |
| மையிற்றிகழு | 28 |
| மோனவயித்திய | 88 |
| யாரொடுநான் | 116 |
| யானென்ன | 96 |
| யானேதியம்புவ | 110 |
| வம்பார்முலை | 63 |
| வருத்தும்பசி | 34 |
| வளந்திகழ் | 35 |
| வாசம்பெறு | 8 |
| வாட்டுங் | 46 |
| வாம்பெற்ற | 21 |
| வாமாமறை | 102 |
| வாரார்முலை | 65 |
| வாரித்திரைமுத் | 92 |
| வாரித்திரைவளை | 74 |
| வாருறுபூண் | 112 |
| வாவாவெனக் | 2 |
| வாழிமறையவர் | 135 |
| வானகமோ | 2 |
| வானவர் | 8 |
| வானேய்மதி | 124 |
| வானைப்புணருஞ் | 17 |
| விடைக்குன்று | 73 |
| விடையுற்ற | 22 |
| விண்ணினர் | 20 |
| விண்ணும்பரவுஞ் | 29 |
| விற்பனர் | 70 |
| விறப்புமிகு | 90 |
| வெருவேன்மற | 112 |
| வெவ்விடமாரு | 54 |
| வெறியார்கடுக்கை | 103 |
| வேண்டுவ | 101 |
| வேதமயன் | 78 |
| வேதியர்வாழ்த்தி | 110 |
| வேலைவிட | 85 |

உ

# சிறப்புப் பாயிரம்

[ சாமிநாதகவிராயர் சொன்னவை ]

(கட்டளைக்கலித்துறை)

1. பூவார வேதியர் நல்வேத மென்பர்த போதனர்கள்
நாவார வாகம மென்ப ரெழுத்தென்பர் நாவலர்கள்
மேவார வேண்மனு நூலென்பர் காமுகர் வேந்தர்சைவர்
தேவார மென்பர் சிராமலைக் கோவையைச் செப்பிடினே.

2. சத்தாந் தனிமறை யாகம சாத்திர மாமங்கமாம்
சித்தாந்த மாமுழு வேதாந்த மாஞ்சித்ர காவியமாம்
முத்தாந்த மூவர்சொல் வாசக மந்த்ர முதுபொருளாம்
கொத்தாந் தலைமனு நூலாஞ் சிராமலைக் கோவையதே.

உ

கணபதி துணை

# முகவுரை

(திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தேவாரம்)

திருச்சிற்றம்பலம்

நன்றுடை யானைத் தீயதி லானை நரைவெள்ளே
றொன்றுடை யானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென் னுள்ளங் குளிருமே.

## கோவையின் இயல்பு

கோவையென்பது தமிழிலக்கணங்களுட் சிறந்த அகப் பொருளுக்கு இலக்கியமாகப் பிற்காலத்துப் புலவர்பெருமக்களாற் பாடப்பெற்றுவரும் பிரபந்தம்; சங்கநூல்களிற் காணப்படும் அகப் பொருட்செய்யுட்களைப்போலன்றித் தொடர்ந்த பொருள் அமையும்படி துறைகள் கோக்கப்பெற்றமையின் இப்பெயர்பெற்றது. இதனைப் பொருட்டொடர்நிலைச்செய்யுட்களுள் ஒருவகையாகிய சிறுகாப்பியத்தின்பாற்படுத்துவர் தண்டியலங்கார உரையாசிரியர்.

எழுத்து முதலிய ஐந்திலக்கணப்பகுதிகளின் அமைதியும் அவற்றுட்சிறப்பாக அகப்பொருளமைதியும்கோவைகளில்இருத்தலின், இவ்வகைப் பிரபந்தங்களை இயற்றுவதற்கு நற்புலமை வேண்டும். "யாவையும் பாடிக் கோவை பாடு" என்று வழங்கும் பழமொழியால், பிற பிரபந்தங்களைப் பாடிக் கைவந்த புலவர்களே கோவையை இயற்றும் தகுதியுடையாரென்பது தெளியப்படும்.

யாப்பருங்கலவிருத்தியுரைகாரர் வித்தாரகவியின் இலக்கணத்தை,

'வித்தாரகவியாவான் மும்மணிக்கோவையும் பன்மணிமாலையும் மறமும் கலிவெண்பாவும் மடலூர்ச்சியும் முதலாகிய நெடும்பாட்டும், கோவையும், பாசண்டமும், கூத்தும், விருத்தமும், கதை முதலாகிய செய்யுளும் இயலிசைநாடகங்களோடும் கலைநூல்களோடும் பொருந்தப் பாடும் பெருங்கவியெனக் கொள்க'

என்று வருக்கின்றார்; வித்தாரகவியாற் செய்யப்படும் சிறப்புடைய நூல்களிற் கோவையும் ஒன்றாதல் காண்க.

இப்பொழுது தெரியவரும் கோவைகளுள் மாணிக்கவாசகர் இயற்றிய திருச்சிற்றம்பலக்கோவையாரும், பாண்டிக்கோவையும், தமிழ் முத்தரையர்கோவையும், குமரசேனாசிரியர்கோவையும் பழமையுடையன. இவற்றுள் பாண்டிக்கோவையிற் பல செய்யுட்கள் இறையனாரகப்பொருள், களவியற்காரிகை, யாப்பருங்கல விருத்தி, இலக்கணவிளக்கம் என்பவற்றின் உரைகளில் மேற்கோளாக வந்துள்ளன. அங்ஙனம் வந்துள்ள செய்யுட்களையன்றி நூல்முழுவதும் இப்பொழுது கிடைக்கவில்லை. பின்னவை இரண்டன் பெயர்கள்மட்டும் வழங்குவதன்றிச் செய்யுட்கள் கிடைத்தில.

கோவையென்னும் பிரபந்தம் நானூற்றின் மிக்க கலித்துறைகளால் இயற்றப்பெறுவது. திருக்கோவையார் நானூறே செய்யுட்களாலாகியது. முதற்கோவையாகிய அதிலுள்ள செய்யுட்களின் தொகையை நினைந்து கோவைகள் எல்லாவற்றிற்கும் நானூற்றுக் கோவை யென்னும் பெயர் பிரபந்தத்திரட்டு என்னும் நூலொன்றிற் சொல்லப்படுகிறது. நின்றசீர்நெடுமாறநாயனாராகிய நெல்வேலி வென்ற மாறனைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டதெனக் கருதப்படும் பாண்டிக்கோவையில் ஒருதுறைக்கே பல செய்யுட்கள் இருக்கின்றன. ஆதலின் அதன்கண் ஆயிரத்தின் மிக்க செய்யுட்கள் இருத்தல்வேண்டுமென்று தோற்றுகின்றது. கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் இயற்றியதாக அறியப்படும் காங்கேயன் நாலாயிரக்கோவை யென்பது நாலாயிரஞ்செய்யுட்களை உடையதென்று அப்பெயரால் ஊகிக்கப்படுகிறது. துறைக்குப் பப்பத்தாக, நானூறு துறைக்கும் நாலாயிரம் செய்யுள் பாடியிருத்தல் கூடும்.

கோவைநூல்கள் கட்டளைக்கலித்துறையால் இயற்றப்படும் வரையறையுடைமைபற்றி அச் செய்யுளுக்குக் கோவைக்கலித்துறையென்னும் பெயர் வழங்கலாயிற்று (வீரசோழியம், யாப்புப். 17, உரை.) அக் கலித்துறைகளைத் தொல்காப்பிய உரையிற்

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கொச்சகத்தின்பாற்படுத்துவர்; யாப்பருங்கலவிருத்தியுடையார் கலிப்பாவின் இனமாக்குவர்; சந்தப் பாவகையில் ஒன்றாகவும் பகுப்பர்;

> 'குமரசேனாசிரியர்கோவையும், தமிழ்முத்தரையர்கோவையும், யாப்பருங்கலக்காரிகையும்போன்ற சந்தத்தால் வருவனவற்றின் முதற்கண் நிரையசைவரின் ஓரடி பதினேழெழுத்தாம்; முதற் கண் நேரசைவரின் ஓரடி பதினாறெழுத்தாம்.' (ப. 486.)

அகப்பொருளமைதியுடைமையின் அகப்பொருட்கோவை யெனவும், ஐந்திணைநெறியளாவுதலின் ஐந்திணைக்கோவை யெனவும் இவ்வகை நூல் பெயர்பெறும். குறிஞ்சி முதலிய அகனைந்திணை ஒழுக்கங்களையும் முறையாக இது கூறுவதினும் ஒரு கதைபோலத் தொடர்புபெறும் பயனோக்கி இம்முறை இறையனார்களவியலிற் குறிப்பாகவும், நாற்கவிராசநம்பியார் இயற்றிய அகப்பொருள் விளக்கத்தில் விளக்கமாகவும் அமைக்கப்பட்டதுபோலும். ஐந் திணையேயன்றிக் கைக்கிளையும் பெருந்திணையும் இவ்வகைநூலிற் காணப்படும். அகனைந்திணைக்கு முன்னர் நிகழ்வதாகிய இக் கைக் கிளைக்கும் பிற கைக்கிளைக்கும் வேறுபாடு உண்டு. இதிலுள்ளது ஆண்பாற்கைக்கிளையே. இதைப்பற்றிப் பேராசிரியர்,

> 'அகத்திணையின்கண் கைக்கிளை வருதல் திணைமயக்காம் பிற வெனின், கைக்கிளைமுதற் பெருந்திணையிறுவாய் எழுதிணையினுள்ளும் கைக்கிளையும் பெருந்திணையும் அகத்தைச் சார்ந்த புறமாயினும், களவிக்கோவையின் எடுத்துக்கோடற்கண் காட்சிமுதலாயின சொல்லுதல் வனப்புடைமைநோக்கிக் கைக்கிளை தழீஇயினர். பெருந்திணை தழுவுதல் சிறப்பின்மையின் நீக்கினார்' (சிற். 4, உரை)

என்று எழுதியவை இங்கே அறிதற்குரியன.

நாற்கவிராசநம்பி நற்காமத்துக்கு முன் நிகழும் கைக்கிளையை அகப்பொருட்கைக்கிளை யெனவும், காமஞ்சாலா இளமையோள் வயிற் காமுறல் முதலியனவற்றை அகப்புறக்கைக்கிளை யெனவும், பாட்டுடைத்தலைவனையே களவித்தலைவனாகக் கூறும் கைக்கிளை யைப் புறப்பொருட்கைக்கிளை யெனவும் வகுப்பர். இங்ஙனமே பெருந்திணையையும் அகப்பொருட்பெருந்திணை முதலியனவாகப் பகுத்துக் கூறுவர்.

திருக்கோவையாருக்குப் பின் எழுந்த கோவைகளிற் பெரும்பாலன அகப்பொருள்விளக்க இலக்கணத்தைப் பின்பற்றி யமைந்தன. இவற்றிற் கூறப்படும் கிளவிகள் கைக்கிளைமுதல் பொருள்வயிற்பிரிவு இறுதியாக 33 ஆகும். ஒவ்வொரு கிளவியிலும் பல துறைகள் உள்ளன. சிலர் சிலதுறைகளை விரித்து இரண்டும் பலவும் ஆக்குவர். சிலர் பலவற்றைச் சுருக்கி ஒன்றாக்குவர். பாங்கி, நாற்றம் தோற்ற முதலிய எழுவகையானும் ஐயுறுதலை ஒருதுறையாக்கிச் சிலர் ஒருபாட்டிற் கூறுவதும், அதனையே விரித்து எழுபாட்டாற் சிலர் கூறுவதும்போன்றன இதற்கு உதாரணமாகும். இக்கிளவிகள் முப்பத்துமூன்றனுள் தெளிவென்பதும் வரைவென்பதும் ஒவ்வொரு துறையையே உடைய கிளவிகள். இயற்கைப் புணர்ச்சியின்கண் உள்ள 'வறிது நகைதோற்றல்' என்ற துறையைக் கவியினது கூற்றாக அமைப்பதே பெரும்பான்மையான மரபென்று என்னுடைய ஆசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அம்மரபினின்றும் மாறுபட்ட கோவைகளும் உண்டு.

கோவையில் வரும் அகத்துறைகளிற்பல அந்தாதி, கலம்பகம் முதலிய வேறுவகைப் பிரபந்தங்களின் இடையிடையே காணப்படும். கலம்பகத்தில் அமைக்கப்படவேண்டுமென்று வரையறுக்கப்பெற்ற உறுப்புக்களில் பாண், இரங்கல், தூது, வண்டு, தழையென்பன அகப்பொருட்டுறைகளேயாம். இங்ஙனம் அமைந்த இடங்களில் அத்துறைகளுக்குரிய பெயர்களிற் சில வேறாகவும் வழங்கும். இடையூறுகிளத்தலை நாணிக்கண்புதைத்த லெனவும், பாங்கி தலைமகள் அவயவத்தருமைசாற்ற லென்பதை, எழுதரிதென்ன என்தலை விலக்க லெனவும் வழங்குவது காண்க.

இத்துறைகளில் ஒன்றையே பொருளாகக்கொண்ட நூறு கலித்துறைகளேனும், நானூறுகலித்துறைகளேனும் பாடப்பெற்ற நூல்கள் சில ஒருதுறைக்கோவை யென்னும் பெயர்பெற்று வழங்கி வருகின்றன. இரகுநாதசேதுபதி ஒருதுறைக்கோவை, சசிவர்ணன் கோவை, தியாகேசர்கோவை முதலியன இவ்வகையைச் சார்ந்தன. இவை முறையே நாணிக்கண்புதைத்தல், வண்டோச்சி மருங்கணைதல், வெறிவிலக் கென்னும் துறைகளை யுடையன.

மொழிக்கு முதலாகும் எழுத்துக்களுள் ஒவ்வொன்றையும் முதலாக உடைய ஒவ்வொரு செய்யுளுக்கும் ஒவ்வொருதுறையை அமைத்துக் கட்டளைக்கலித்துறையாற் பாடப்படும் வருக்கக் கோவை யென ஒருவகைப்பிரபந்தம் உண்டு. நெல்லைவருக்கக் கோவை, பாம்பலங்காரர் வருக்கக்கோவை முதலியன அவ்வகை யைச் சார்ந்தவை.

பிரபந்தவகைகளில் தூது, மடல் முதலியன அகப்பொருட் டுறையையே பின்பற்றி விரிவாகச் செய்யப்படுவனவாம்.

அகப்பொருளமைதியினால் இயலும், சந்தவகையைச்சார்ந்த செய்யுட்களையுடைமையினால் இசையும், கூற்றுவகையுடைமையி னால் நாடகமும் ஒருங்கேபொருந்திய கோவை முத்தமிழிலக்கிய மாகவும் சிறப்பிக்கத்தகும் பெருமை வாய்ந்தது. அத் தகுதி பற்றியே பேராசிரியர் திருக்கோவையாருக்கு உரை இயற்றினார்; சொக்கப்பநாவலரென்ற புலவர் தஞ்சைவாணன் கோவைக்கு உரையெழுதினர்.

நன்றியறிவின் திறத்தினால் தம்மை ஆதரித்த பிரபுக்கள் மீதும், பக்திச்சிறப்பால் தெய்வங்களின்மீதும் பாடப்பெற்ற கோவைகள் பல. தலங்களிற் பற்றுடைய புலவர்கள் அவ்வத்தல மூர்த்திகளின் விஷயமாகப் பாடிய கோவைகள் பல. திருச்சிற்றம் பலக்கோவையார் தில்லைத்தலத்திற் குரிய கோவையாதல் காண்க. இப்படியே மதுரை முதலிய சிவஸ்தலங்களுக்கும் பழனி முதலிய சுப்பிரமணியஸ்தலங்களுக்கும் ஸ்ரீரங்கம் முதலிய விஷ்ணுஸ்தலங் களுக்கும் கோவைகள் உண்டு. ஒரேவகையான பொருளமைப் பின்மேல் இவ்வளவு கோவைகளையும் தனித்தனிச் சிறப்பியல்கள் பொருந்த இயற்றிய புலவர்களின் திறமையை நினைக்கையில் விம்மித முண்டாகின்றது. ஒரேவகை உறுப்புக்களால் அமைந்தன வாயினும் மக்களின் முகங்களில் ஒன்றைப்போல மற்றொன்று இராமல் அமைத்த கடவுளின் படைப்பையே இக் கவிஞர்களின் படைப்புக்கு உவமை கூறவேண்டும்.*

---

* கோவையைப்பற்றிய வேறுசில செய்திகளையும், கோவைப்பொருட் டொடர்பையும் சிவக்கொழுந்துதேசிகர் பிரபந்தங்களி லுள்ள கோடீச்சுரக் கோவையின் நூன்முக முதலியவற்றால் அறியலாகும்.

## சிராமலைக் கோவை

சிராமலைக்கோவை யென்பது தட்சிணகைலாய மென்னும் சிறப்புடைய திருச்சிராப்பள்ளியி லுள்ள மலையிற் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள தாயானசெல்வரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு இற்றைக்குச் சற்றேறக்குறைய 150 வருஷங்களுக்கு முன் பாடப்பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர்பெயர் தெரியவில்லை. இந்நூல் காப்பு, வாழ்த்தாகிய இரண்டும் உட்பட 458 செய்யுட்களை யுடையது. இது சிரகிரிக்கோவை யென்றும் வழங்கும்.

## ஏட்டுப்பிரதி

இக்கோவையின் ஏட்டுப்பிரதியொன்று இளமையில் எனக்குத் திருவாவடுதுறையாதீனத்திலிருந்து கிடைத்தது. அப்பால் திருநெல்வேலி, சாலிவாடீசுவர ஓதுவாரவர்கள் வீட்டிலிருந்து வேறொன்று கிடைத்தது. திருவாவடுதுறைப்பிரதியின் முடிவில்,

> ‘கால்யுக்தி௵ மாசி௴ உகூ-சனிவாரமும் ரேவதி நக்ஷத்திரமும் திரிதியையும் கூடின சுபதினத்தில் சிரகிரிக்கோவை எழுதி நிறைந்தது; தெட்சிணகைலாஸபதி ஸ்ரீமாதுருபூதேசுவரஸ்வாமி பாதாரவிந்தமே துணை; குமாரகுருபரன் துணை’

என்பன எழுதப்பட்டிருந்தன. திருநெல்வேலிப் பிரதியின் ஓரேட்டில் இதன் பின் உள்ள ஆசிரியர் வரலாற்றிற் காணப்படும் நிருபம் எழுதப்பட்டிருந்தது; அப்பிரதியின் இறுதியில்,

> ‘சார்வரி௵ தை௴ கடுவ சிரகிரிக்கோவை எழுதி நிறைந்தன’

என்ற வாக்கியம் காணப்பட்டது.

இந்நூலைச் சிறப்பித்துச் சாமிநாதகவிராயரென்னும் ஒருவர் பாடிய இரண்டு செய்யுட்கள் உண்டு. அவை இந்நூலைப் பலபடப் பாராட்டுகின்றனவேயன்றி இந்நூலாசிரியர் இன்னாரென்பதைப் புலப்படுத்தவில்லை.

## பதிப்பு

தாயான செல்வத்தின் திருவருளால் இப்பொழுது குறிப்புரை முதலியவற்றுடன் இந்நூல் வெளியிடப்படுகின்றது. படிப்பவர்களுக்குப் பயன்படும்பொருட்டுச் சிராமலைச்சிறப்பும் நூலாசிரியர் முதலியோர் வரலாறும், நூலாராய்ச்சியும் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

இக்கோவையை வெளியிடவேண்டுமென்று பன்முறை வற்புறுத்தி ஊக்கியவரும் திரிசிரகிரிசம்பந்தமான பல செய்திகளைத் தெரிந்து எனக்கு அறிவித்து உதவியவருமாகிய திருச்சிராப்பள்ளி ஸெயிண்ட் ஜோஸப் கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீமான். மு. நடேச முதலியாரவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

நான் பிரதிசெய்து ஆராய்ந்துவைத்திருக்கும் பிரபந்தங்களை வெளியிடுதற்கு வேறுவழியின்மையின் செந்தமிழ், கலைமகள், சிவநேசன் ஆகிய பத்திரிகைகளில் சிலபிரபந்தங்களை வெளியிடலானேன். இந்நூலைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிட்டு உதவிய அதிபர்களுடைய ஆதரவு எனக்கு ஊக்கமளிக்கின்றது.

இந்நூலை ஆராயும்பொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உடனிருந்து உதவிசெய்தவர்கள் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

'தியாகராஜ விலாஸம்'<br>திருவேட்டீசுவரன்பேட்டை<br>14—1—37.

இங்ஙனம்,<br>வே. சாமிநாதையர்.

# சிராமலைச் சிறப்பு

## பெயர்

சிராமலை யென்பது திரிசிராமலையென்பதன் நாமைகதேசம். திரிசிரனென்னும் அரக்கன் இருந்து அரசாண்டு இறைவனைப் பூசித்துப் பேறுபெற்றமையின் இப்பெயர் உண்டாயிற்றென்று இத்தலத்திற்குரிய புராணம் கூறும். இக்காரணம்பற்றியே திரிசிராப்பள்ளி, திரிசிரபுரம், திரிசிரகிரி யென்னும் பெயர்கள் அமைந்தன. முடியுடைவேந்தரான சோழருடைய இராசதானிநகரமாகிய உறையூர் இதன் மேல்பால் அமைந்திருக்கின்றது.

## அகநானூற்றிற் கண்ட செய்தி

இத்தலத்தைப்பற்றி அகநானூற்றில் குறுங்குடி மருதனா ரென்னும் புலவர்,

"கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத்து" (சு: 14-5)

என்று பாடியுள்ளார். இப்பகுதிக்குப் பழைய உரையாசிரியர்,

'உறையூர்க் குணாது குன்றமென்றது உறையூர்க்
குக் கீழ்ப்பக்கத்ததாகிய சிராப்பள்ளிமலை'

என்று பொருள் எழுதினர்.

## தலப்பெயர்கள்

கைலையங்கிரியின் கொடுமுடிகள் மூன்று வாயுவினாற் பெயர்த்து வீசப்பட்டன வென்பதும் அம்*மூன்றனுள் ஒன்று இம்மலை யென்பதும் அதனால் இதற்குத்தட்சிண கைலாசமென்னும் பெயர்வந்த தென்பதும் புராணவரலாறுகள். தென்கயிலை யெனத் தமிழில் வழங்கும். சாரமாமுனிவ ரென்பவரால் நாகலோகத்திலிருந்து கொணர்ந்து வளர்த்த செவ்வந்திமலர்களாற் சிவபிரான்

* ஏனையிரண்டும் திருக்காளத்தியும் திருக்கோணசலமுமாம்.

பூசிக்கப்பெற்றமையின் அவருக்குச் †செவ்வந்திநாத ரெனவும் இத்தலத்துக்குச் செவ்வந்திமாநக ரெனவும் திருநாமங்கள் அமைந்தன.

## மூர்த்திகளின் திருநாமங்கள்

மலைமேல் எழுந்தருளியிருத்தலின் திருமலைக்கொழுந்தென வும், கருவுற்றிருந்த வணிகப்பெண்ணிற்குத் தாயாகிவந்து மருத் துவம் புரிந்தமையின் தாயானசெல்வர், தாயுமானவர், மாத்ரு பூதேசுவரர் எனவும் இத்தலத்துச் சிவபெருமான் வழங்கப்பெறு வார்.

அம்பிகையின் திருநாமம் மட்டுவார்குழலம்மை, சுகந்த குந்தளாம்பிகை யென்பன.

இங்கே சிவாலயத்தில் செவ்வந்திவிநாயகரென்ற விநாயகரும், மலையின் உச்சியில் உச்சிப்பிள்ளையாரென்ற விநாயகரும் எழுந்தருளி யிருக்கின்றனர். விபீஷணனிடமிருந்து திருவரங்கநாதனை வாங்கி ஸ்ரீரங்கத்தில் வைத்துவிட்டு இம்மலையில் விநாயகக்கடவுள் ஏறி உச்சியில் அமர்ந்தன ரென்றதொரு கர்ணபரம்பரைச்செய்தி வழங்கிவருகின்றது.

இங்குள்ள குகையில் முருகக்கடவுள் எழுந்தருளியிருந்த தாகப் புராணம் கூறும்.

## பூசித்தோர்

இத்தலத்திலுள்ள சிவபெருமானைப் பூசித்துப்பேறுபெற்றோர் அகத்தியர், அருச்சுனன், அனுமான், இந்திரன், இரத்தினவதி யென்ற செட்டிப்பெண், இராமன், உமாதேவியார், சப்தகன்னியர், சப்தரிஷிகள், சாரணர்கள், சாரமாமுனிவர், சித்தர்கள், சூரவா தித்தசோழன், திரிசிரன், நாககன்னியர், பாம்பு, பிரமதேவர்,

† செவ்வந்தியப்பன், செவ்வந்தியாண்டி எனத் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த இடங்களிலுள்ளோர் பெயர்வைத்துக்கொள்ளும் வழக்கம் இன்றும் உள்ளது.

வண்டு, ஜடாயு முதலியோர். அனுமான் பூசித்ததற்கு அறிகுறியாக அனுமக்கொடியும் அனும்முத்திரையும் இக்கோயி லுக் குரியனவாக வழங்கிவருகின்றன.

## தீர்த்தங்கள்

இத்தலத்துக்குரிய தீர்த்தங்கள் காவிரி, சிவகங்கை, பிரமதீர்த் தம், நன்றுடையான், தீயதிலான் முதலியன. இவற்றுள் பின் இரண்டுதீர்த்தங்களின் பெயர்களும் "நன்றுடை யானைத் தீயதி லானை" என்ற தேவாரத்தொடரைப் பின்பற்றி அமைந்தன போலும். இங்கே 'நாஷனல் காலேஜு'க் கருகில் காவிரியம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. சின்னையாப் பிள்ளையவர்கள் சத்திரத் திற்கருகில் ஓடத்துறைப்பிள்ளையார்கோயில் என ஒரு கோயில் உண்டு. முற்காலத்தில் காவிரி அவ்விடத்துக்கு அருகில் ஓடி யிருக்கக்கூடு மென்றும், ஓடம்விடுந்துறையில் இருந்தமையின் அவ் விநாயகருக்கு அத் திருநாமம் உண்டாயிற் றென்றும் சிலர் சொல் வர். இங்ஙனம் ஆறுகள் பழையகாலத்தில் இருந்த நிலையிலிருந்து மாறிச்செல்லும் இடங்கள் பல உண்டு.

"குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீர"

என்று திருப்புகழில் உள்ள பகுதியால் காவிரி முற்காலத்திற் சிரா மலைக்கு அருகில் ஓடியதாகக் கருதவும் இடமுண்டு.

## சிற்பமும் சிலாசாசனங்களும்

சிராமலைக்கோயில் மிகப் பழமையானது. இவ்வாலயத்தில் பல் லவர்களால் அமைக்கப்பட்ட இரண்டு குகைகள் உள்ளன. மேலுள்ள குகையில் திருநாவுக்கரசருடைய வரலாற்றைவிளக்கும் சிற்பங்கள் இருக்கின்றன. இக்கோயிலில் பல அருமையான சிலா சாஸனங்களைக் காணலாம். அவற்றுள் முதல் மகேந்திரவர்மன் காலத்து* வடமொழிச்சாஸனம் ஒன்று. அச் சாஸனம்

---

* தென்னிந்திய சிலாசாஸன அறிக்கை, 1888ஆ 63, 64.

தெரிவிக்கும் அப் பல்லவனுடைய பெயர்களில் குணபரனென்ப தொன்று. திருநாவுக்கரசரை அலைத்துப் பின் அவருடைய அருணிலைகண்டு சைவனாகிய குணபரனே அவனென்று அறிஞர் கருதுகின்றனர். அப்பல்லவ அரசன் இங்கே ஒருகோயிலெடுப்பித்துச் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தானென்று மேற்கூறிய சாஸனம் தெரிவிக்கின்றது.

முதல் இராஜராஜன்காலத்துச்*சாஸனமொன்றில் இவ்வூர் உறையூர்க் கூற்றத்துச்சிற்றம்பரிலுள்ள சிராப்பள்ளியென்று குறிக்கப்பட்டிருக்கின்றது. வேறுள்ள சாஸனங்களிலிருந்து இம்மலைக்குத் திருமலையென்னும் பெயரும், இறைவனுக்குத் திருமலைப் பெருமானடிகளென்னும் திருநாமமும் உண்டென்பது அறியப்படுகின்றது.

அம்பிகை திருக்கோயிலில் ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அருளிச்செய்த ஸ்ரீஸௌந்தர்யலஹரி கல்லிற் பொறிக்கப்பட்டிருக்கிறது. மேலுள்ள குடைவரைக்கோயிலில் 104 செய்யுட்களடங்கிய †சிலாசாஸனமொன்று இருக்கின்றது. அதில் முதல் 102 பாட்டுக்கள் ஒரு கலித்துறையந்தாதிநூலாகவும், 103-ஆம் செய்யுளாகிய கலித்துறையும் 104-ஆம் செய்யுளாகிய வெண்பாவும் நூல் செய்தார் இன்னாரென்பதை வெளியிடுவனவாகவும் உள்ளன. அவற்றால் அந்நூல் வேம்பையர்கோன் நாராயணன் என்ற ஒருவரால் இயற்றப்பட்டதாகத் தெரியவருகிறது. அந்நூற் செய்யுட்களிற் பல சிதைந்துள்ளன; சில வருமாறு:—

1. நிற்குந் துயர்கொண் டிருக்கும் பொழுதின்றி நெஞ்சனுங்கித்
தெற்கும் வடக்குந் திரிந்தே வருந்திச் சிராமலைமேற்
பொற்குன்ற னைக்கண்டு கொண்டே னினிப்புறம் போகவொட்டேன்
கற்குன் றனையநெஞ் சிற்செல்வ ராலில்லை காரியமே.

---

* தென்னிந்தியசிலாசாஸன அறிக்கை, 1904ஞ 412.

† தென்னிந்தியசிலாசாஸனங்கள்-தொகுதி IV-167-ஆம் சாஸனம்.

2. தழைகொண்ட கையர் கதிர்கொண்ட மெய்யர் தளர்வுகண்டு
பிழைகொண்ட பொய்யொன்று பேசிவிட் டேற்கவர் பேரருளால்
மழைகொண்ட கண்டர்தம் மாநீர்ச் சிராமலை வந்துநின்றார்
உழைகொண்ட நோக்கியின் றென்னுரைக் கேனவ ருற்றிடினே. (17)

3. மதவிடைப் பாகன் மதியிடைப் பாகன் மழைநிறத்தோற்
குதவிடப் பாக னுமையிடப் பாக னுயர்கலிங்கு
கதவிடப் பாகு கமுகெழக் காமர் கடிநகர்வாய்ப்
புதவிடப் பாய்புனற் பொன்னிச் சிராமலைப் பொன்வண்ணனே. (21)

4. அயிர்ப்புடை யாய்நெஞ்ச மேயினித் தேறர மங்கையல்லள்
செயிர்ப்புடை யார்தந் திரிபுரஞ் செற்றான் சிராமலைவாய்ப்
பயிர்ப்புடை யாளடி பார்தோய்ந் தனபடைக் கண்ணிமைக்கும்
உயிர்ப்புடை யாளிவ் வுலகுடை யார்பெற்ற வொல்கிடையே. (24(

5. பெருஞ்சிலை யாற்புர மூன்றெரித் தோன்பிறைக் கோட்டுக்கைம்மா
உரிஞ்சிலை தேங்கமழ் பாங்கர்ச் சிராமலை யுள்ளலர்போல்
வருஞ்சிலை யோர்நும ராயின் மறைவன்வன் கானவரேற்
கருஞ்சிலை யாலழிப் பன்கலங் காதுநில் காரிகையே. (27)

6. பனிப்படம் போர்த்தனள் பார்மகள் யானும் பசலையென்னும்
துனிப்படம் போர்த்திங்குற் றேனங்குற் றாரன்பர் துங்கக்கைம்மா
முனிப்படம் போர்த்த பிரான்சிராப் பள்ளியு மூரிக்கொண்மூத்
தனிப்படம் போர்க்கும் பருவமன் றோவந்து சந்தித்ததே. (31)

7. இனிச்செல்வர் முன்கடைக் கென்செயச் சேறு மினையனெஞ்சே
கனிச்செல்வ மாம்பொழிற் காவிரித் தென்கரைப் பூவிரிக்கும்
முனிச்செல்வர் சேருஞ் சிராப்பள்ளி மேயமுக் கட்சுடரைத்
தனிச்செல்வ னைப்பணிந் துள்ளமிர் தூறித் தடித்தனமே. (35)

8. காலால் வலஞ்செய்து கையாற் றொழுதுகண் ணாரக்கண்டு
மேலா னவருடன் வீற்றிருப் பானெண்ணின் மெய்ப்புலவீர்
சேலார் கழனிச் சிராமலை மேயசெம் பொற்சுடரைப்
பாலா னறுநெய்யொ டாடியைப் பாடிப் பணிமின்களே. (39)

9. நெஞ்சந் துணையுண்டு நீர்நிலத் துண்டு நிழலுமுண்டு
தஞ்சப் பெருக்குள தானஞ் சிராமலைச் சாரலுண்டு
துஞ்சந் துணையுஞ் சிவனைத் தொழுது துறக்கமெய்தார்
பஞ்ச நலியப் பலிதிரி வார்சிலர் பாவியரே. (42)